


ISSN: 2582-5518

புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ பிப்ரவரி. 07, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 120 ❖ ரூ.10

மடியில் கணமில்லை, வழியில் பயமில்லை ; வாருங்கள்

# பழகுவோம்

## வருமான வரி, அமலாக்கத் துறை வந்தால் கவலை இல்லை, வரவேற்கிறோம்; சட்டத்துறை அமைச்சர் ரகுபதி

புதுக்கோட்டை, பிப். 7-

**"மடியில் கணமில்லை, வழியில் பயமில்லை என்பதால் பாஜகவின் அண்ணாமலை கூறுவதைப் போன்று அமலாக்கத் துறை வந்தாலோ, வருமான வரித்துறை வந்தாலோ நாங்கள் கவலைப்படப் போவதில்லை, வந்தால் வரவேற்கிறோம்" என மாநில சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்திருக்கிறார்.**



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், தேக்காட்டூர் ஊராட்சியில், இலங்கைத் தமிழர் நலன் மறுவாழ்வு முகாமில், பொது மற்றும் மறுவாழ்வுத்துறையின் சார்பில், ரூ.3.56 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 58 குடியிருப்புகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல்தடுப்புசட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், செஞ்சி கே.எஸ்.மஸ்தான், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து, பயனாளிகளுக்கு வீட்டிற்கான சாவிகளை வழங்கினார்கள்.

பின்னர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது, "ஆளுநருக்கு நிறைய கோப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. சில கோப்புகளுக்கு ஆளுநர் அனுமதி அளித்துள்ளார். சில கோப்புகள் நிலுவையில் உள்ளன. சிறையில் இருந்து முஸ்லிம் சிறைவாசிகள் விடுதலை நடவடிக்கையில் திமுக அரசைத் தவிர வேறு எந்த அரசும் இதுபோன்று எடுத்ததில்லை.

கோடநாடு கொலை வழக்கில் தடயவியல் ஆய்வாளர்கள் திருச்சியில் சோதனை நடத்தியதைப் பொறுத்தவரையில், அவர்கள் தங்களது கடமைகளை செய்துள்ளனர். அவர்கள் அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில்தான் அடுத்தகட்ட நடவடிக்கை இருக்கும். கோடநாடு வழக்கில் 3மாதங்களுக்குள் நடவடிக்கைஎடுக்கப்படும் என்று கூறிவிட்டு 36 மாதங்களாகியும் திமுக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் விமர்சித்துள்ளார்.

ஓபிஎஸ் மற்றும் இபிஎஸ் ஆகிய இருவருமே பாஜவின் கொத்தடிமைகள். இருவரும் தங்களது கட்சியை பாஜகவினரிடம் அடகுவைத்துவிட்டனர். இதைப் பற்றி பேசுவதற்கு அவர்களுக்கு எந்த தகுதியும் இல்லை. எங்களைப்பொறுத்தவரை கோடநாடு வழக்குக்கு புத்துயிர் கொடுத்து விசாரித்துகொண்டு இருக்கிறோம். முதல்வர் ஸ்டாலின் எடுத்த நடவடிக்கையினால்தான் இந்த வழக்கில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மடியில் கணமில்லை, வழியில் பயமில்லை என்பதால் பாஜகவின் அண்ணாமலை கூறுவதைப் போன்று அமலாக்கத் துறை வந்தாலோ, வருமான வரித்துறை வந்தாலோ நாங்கள் கவலைப்படப் போவதில்லை, வந்தால் வரவேற்கிறோம்" என்று அமைச்சர் ரகுபதி கூறினார்.

## "நிதிக் கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாப்பதில் கேரள அரசின் உறுதிக்கு முழு ஆதரவு" – முதல்வர் ஸ்டாலின்

சென்னை, பிப். 7-

மாநில அரசின் நிதி நிர்வாகத்தில் மத்திய அரசு தலையிடுவதை எதிர்க்கும் கேரள அரசுக்கு தமிழ்நாடு அரசு முழு ஆதரவு அளிக்கும் என கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருக்கிறார்.



முதல்வர் ஸ்டாலின் இது தொடர்பாக நேற்று எழுதியுள்ள கடிதத்தில், "மாநில அரசுகளின் நிதி நிர்வாகத்தில் தன்னிச்சையான மற்றும் பாரபட்சமான கட்டுப்பாட்டைச் செயல்படுத்தி, மாநிலங்களின் குரல்வளையை நெரிக்க மத்தியஅரசுமேற்கொள்ளும் நடவடிக்கைகளைஎதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ள கேரள அரசுக்குப் பாராட்டுக்கள். மத்திய அரசு சில காலமாகவே மாநில அரசுகளுக்கு எதிராக இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாலும், கடந்த சில ஆண்டுகளில் நிலைமை வேகமாக மோசமடைந்துள்ளது.

மாநிலங்களின் நிதி நிர்வாகத்தில் இத்தகைய மறைமுகக்கட்டுப்பாடுகள் அகற்றப்பட வேண்டும் என்பதில் முற்போக்கான மாநிலங்களிடையே தெளிவான, ஒருமித்த கருத்து உருவாகியுள்ளது. மாநிலங்களின் பொதுச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான பொதுக்கடன் என்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநில சட்டமன்றத்தின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்கு உட்பட்டது. இருப்பினும், மாநிலங்கள் கடன் வாங்குவதற்கான வாய்ப்புகளைக் கட்டுப்படுத்த, இந்திய அரசமைப்பின் 293-வது பிரிவின் கீழ் தனக்குள்ள அதிகாரத்தைமத்திய அரசு தவறாகப் பயன்படுத்தி வருகிறது.

இந்தப் பிரிவின்படி, மத்திய அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்ற ஷரத்து, மாநில அரசின் நிதிப் பொறுப்பு மற்றும் வரவு-செலவு மேலாண்மைவிதிகளின்படி வரையறுக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறையை நேர் செய்யும் மாநில அரசின் முனைப்புகளை தடுக்கும் கருவியாக மத்திய அரசால் மாற்றப்பட்டுள்ளது. இதன் விளைவாக அரசமைப்பு சட்டத்தை உருவாக்கியவர்கள் கருதிய நிதிக் கூட்டாட்சியின் அடிப்படைக்கே மாபெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மத்திய அரசின் இத்தகைய நடவடிக்கைகள், மாநில அரசின்முன்முயற்சிகளுக்கு நிதி திரட்டுவதில் குறிப்பிடத்தக்க பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. முதலாவதாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு தொடர்ந்து 15 விழுக்காடு வளர்ச்சியை அடைந்த போதிலும், 2023-2024 ஆம் ஆண்டில் நிகரக் கடன் உச்சவரம்பைக் கணக்கிடுவதற்கான மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சியை வெறும் 8 விழுக்காடாக மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. இதனால், நடப்பாண்டில், 6,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இரண்டாவதாக, மின் துறை சீரமைப்புகளுக்காக கூடுதல் கடன் பெறுவதற்கானவழிகாட்டி நெறிமுறைகளின்படி, மாநில மின் விநியோக நிறுவனங்களின் (DISCOMs) மொத்த இழப்புக்கு நிதியளிக்கவேண்டும்என்ற கட்டாய நிபந்தனையால், நடப்பாண்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ரூ.17,111 கோடி வழங்க வேண்டிய கட்டாயத்திற்கு தமிழ்நாடு அரசு தள்ளப்பட்டுள்ளது., இது இந்த ஆண்டு மாநிலத்தின் நிதி வாய்ப்புகளைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியுள்ளது. எதிர்காலத்திலும் மாநிலங்களை பாதிக்க வாய்ப்புள்ளது.

மூன்றாவதாக, மத்திய அரசின் திட்டமான, சென்னை மெட்ரோ இரயில் 2 ஆம் கட்ட திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளிப்பதில் வேண்டுமென்றே காலதாமதம் செய்ததால், இத்திட்டத்திற்கான மொத்த கடனான 33,594 கோடி ரூபாய் முழுவதும், மாநிலத்தின் நிகரக் கடன் உச்சவரம்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஜி.எஸ்.டி. அமலாக்கத்தின் மூலம் மாநிலங்களின் நிதித் தன்னாட்சி கடுமையாக குறைக்கப்பட்டுள்ள நேரத்தில், இத்தகைய பாரபட்சமான மற்றும் அரசியலமைப்பிற்கு முரணான நடவடிக்கைகளை மத்திய அரசு முன்னெடுத்து வருகிறது.

இதனால் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமலுக்கு முந்தைய காலகட்டத்தை ஒப்பிடுகையில், ஆண்டொன்றுக்கு 20,000 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறையைதமிழ்நாடு அரசு எதிர்கொண்டு வருகிறது என்றும், இழப்பீட்டுத் திட்டத்தை நீட்டிக்க மத்திய அரசு மறுத்து வருகிறது. மாநிலங்களின் கொள்கை முன்னுரிமைகளின்படி வளங்களைத் திரட்டுவதற்கும், முக்கியமான வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கும் உள்ள திறனை முடக்குவதையே மத்திய அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒருமித்த கருத்துடையமுற்போக்கான மாநில அரசுகள் இதனை எதிர்க்க வேண்டும்.

நிதிக் கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாப்பதில் கேரள அரசின் உறுதிப்பாட்டைதான் முழுமையாக ஆதரிக்கிறோம். இந்த விஷயத்தில்தமிழ்நாடுஅரசு தனது முழு ஒத்துழைப்பை கேரள அரசுக்கு வழங்கத் தயாராக உள்ளது. இந்த முக்கியமான சவாலை எதிர்கொள்ளகேரளஅரசின் நடவடிக்கைகளோடு,தமிழக அரசின் முயற்சிகளையும் ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டும்" என தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## எல்.முருகனிடம் டி.ஆர்.பாலு பொது இடத்தில் மன்னிப்புக் கேட்க வேண்டும் : அண்ணாமலை காட்டம்

ராணிப்பேட்டை,பிப்.7-

மத்திய இணை அமைச்சர் முருகனிடம், திமுக எம்.பி. டி.ஆர்.பாலு பொதுஇடத்தில்மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார். முன்னதாக, நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தின்போது, மத்திய இணை அமைச்சர் முருகனை, டி.ஆர்.பாலு கடுமையாக சாடியது கவனிக்கத்தக்கது.



ராணிப்பேட்டையில் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "ரொம்ப வருத்தமான ஒரு விசயம். நாடாளுமன்றத்தில், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், அவருடைய துறைச் சார்ந்த ஒரு கேள்விக்கு பதிலளிக்கிறார். அப்போது திமுகவின் மூத்த தலைவர், மக்களவை உறுப்பினர் டி.ஆர்.பாலு, மத்திய இணையமைச்சர் முருகனைப் பார்த்து அன்ஃபிட்என்றுகூறுகிறார். தகுதியில்லாத அமைச்சர் என்று கூறுகிறார்.

ஒரு மத்திய அமைச்சர், நாடாளுமன்றத்தில் தன்னுடைய துறை சார்ந்த கேள்விக்கு பதிலளித்துக் கொண்டிருக்கும் அமைச்சரைப் பார்த்து டி.ஆர்.பாலு இவ்வாறு கூறியிருக்கிறார்.உடனடியாக, அங்கிருந்த நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர்பிரகலாத்ஜோஷி உள்ளிட்ட அனைவரும் எழுந்துதங்களதுகடுமையான கண்டனங்களை பதிவு செய்தனர்.

பிஃட் ஆன அமைச்சர் என்றால் யார் என்று டி.ஆர்.பாலுவிடம் கேட்க விரும்புகிறேன். கொள்ளை அடிப்பவரா, அப்பா தலைவராகஇருப்பார்,மகன் அமைச்சராக இருப்பதா? இல்லை ஒரே குடும்பத்தில் பிறந்தவர்கள் பிஃட் ஆன அமைச்சரா? இல்லை, பணக்காரர்களாகஇருந்தால் பிஃட் ஆன அமைச்சரா? அமைச்சர் முருகனின் தாய் தந்தையர் நாமக்கல்லில் தோட்டத்து வேலை செய்து வருவதால்,அவர் அன்பிஃட் அமைச்சரா? இல்லை அருந்ததியர் சமுதாயத்தில் பிறந்ததால் அன்பிஃட்டா?

எனவே, மத்திய இணையமைச்சர் முருகனிடம் டி.ஆர்.பாலு பொதுஇடத்தில்மன்னிப்புக் கேட்க வேண்டும். நீங்கள் முருகன் குறித்து தவறாக பேசவில்லை. அவருடைய சமுதாயம் குறித்து தவறாக பேசியிருக்கிறீர்கள். தமிழகத்தில் இருக்கும் ஒட்டுமொத்த பட்டியலின சகோதர, சகோதரிகளை டி.ஆர்.பாலு தவறாக பேசியுள்ளார்.ஒட்டுமொத்த அருந்ததிய சமுதாயத்தை தவறாக பேசியுள்ளார். எனவே, இதை எந்த காரணத்துக்காகவும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழகத்தில் 35 அமைச்சர்கள் உள்ளனர். அதில்மூன்றுபேர்மட்டுமே பட்டியலின சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.இதுவாசமூக நீதி? ஆனால், மத்திய பாஜக அரசில் மொத்தமுள்ள 75 பேரில் 12 பேர் பட்டியலின சமூகத்தினர்,8பழங்குடியினர் என 20 பேர் அங்கம் வகிக்கிறார்கள்.எதுசமுகநீதி?" என்று அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, மத்திய இணையமைச்சர் எல். முருகனைப் பார்த்து "நீங்கள் எம்.பி. பதவிக்கும், அமைச்சராக இருப்பதற்கும் தகுதியற்றவர்" என்று திமுக எம்.பி. டிஆர் பாலு மக்களவையில் பேசியது பெரிய சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் நிமித்தமாக பாஜகவினர் மக்களவையில் கடும் கண்டனங்களைப் பதிவு செய்துள்ளனர்.

## சிவகங்கை மாவட்ட காவல்துறை காவல் வாகனம் நடமாடும் கண்காணிப்பு வாகனமாக மாற்றம்

மதுரை ,பிப்.7-

மதுரை மத்திய சிறையில் சுமார் ஆயிரம் தண்டனை சிறைவாசிகள் உள்ளனர் இவர்கள் அனைவருக்கும் சிறையில் அவரவர் திறமைக்கு ஏற்ப தொழில்கள் வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர் சமீபகாலமாக மதுரை மத்திய சிறையில் கூடுதலாக கலைநயமிக்க மர வேலைபாடு மரப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் இரும்பு பர்னிச்சர் பொருட்கள் தயாரித்தல் ஆகியவற்றில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.



சிறைத்துறை தலைமை இயக்குனர் மகேஸ்வரர் தயாள் விடுதலைக்குப் பின் சிறைவாசிகளின் வாழ்வாதாரத்திற்கு தொழிற் பயிற்சிகள் வழங்கி அவர்களை சீர்திருத்தி சமுதாயத்தில் நல்ல வழியில் தொழில் புரிந்து வாழ்வதற்காக தொழிற்பயிற்சிகள் வழங்குவதற்குநடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

சிறைவாசிகளும் சிறை துறைமூலம் வழங்கப்படும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளில் கலந்து கொண்டு தங்கள் தொழில் திறமையை வளர்த்துக் கொண்டுள்ளனர். சிறைவாசிகள் தங்கள் திறமையை வெளிக் கொணரும் வகையில் தயார் செய்யப்படும் பொருட்கள் மதுரை சிறை சந்தையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விற்பனைக்குவைக்கப்பட்டு மக்களிடமும் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது.

முதல் முதலாக மதுரை மத்திய சிறையின் சிறைவாசிகளின் தொழில் திறனை காவல்துறை அங்கீகரிக்கும் வகையில் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த்தங்கள் மாவட்ட காவல் வாகனத்தை சிசிடிவி பொருத்தி நடமாடும் கண்காணிப்பு வாகனமாக மாற்றும் பணியை மதுரை சிறை நிர்வாகத்திற்கு வழங்கினார்.

மதுரை சிறை நிர்வாகத்தின் மூலமாக சிவகங்கை மாவட்ட காவல்துறை காவல் வாகனத்தை ஒரு முழுமையான நடமாடும் கண்காணிப்பு வாகனமாக மாற்றி வடிவமைக்கப்பட்டு காவல்துறையிடம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மதுரை சரக சிறைத்துறை டிஐஜி பழனிதலைமையில்மத்திய சிறை எஸ்பி சதீஷ்குமார் முன்னிலையில்சிவகங்கை மாவட்ட தொழில்நுட்ப ஆய்வாளர் சுந்தர வடிவேலு வாகனத்தை பெற்றுக்கொண்டார். மதுரை சிறை சந்தை மதுரை மத்திய சிறை சிறை வாசிகள் மூலமாக 24 நாட்களில் மிகப் பிரம்மாண்டமாக கட்டி முடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

## "மம்தா பானர்ஜி 'இந்தியா' கூட்டணியில்தான் இருக்கிறார்" – ராகுல் காந்தி

ராஞ்சி : பிப். 7-

"மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி 'இந்தியா' கூட்டணியில்தான் இருக்கிறார். இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான உறுப்பினர்கள் இன்னும் இந்தக் கூட்டணியில்தான் உறுப்பினர்களாக உள்ளனர்" என காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

ராகுல் காந்தியின் 'பாரத் ஜோடோ நியாய யாத்திரை' தற்போது ஜார்க்கண்டில் நடந்து வருகிறது. இந்நிலையில், கும்லாவில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர், "பிரதமர் மோடி தன்னை ஒரு பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர் (OBC) எனக் கூறிக் கொள்கிறார். பின்னர் குழப்பமடைகிறார். அதே நேரத்தில் நாட்டில் ஏழைகள், பணக்காரர்கள் என இரண்டு சாதிகள்தான் உள்ளன என்றும் கூறுகிறார். இந்திய மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர் ஓபிசி பிரிவைச் சேர்ந்தவர்கள், 15 சதவீதம் பேர் தலித்துகள் மற்றும் ஆதிவாசிகள் எட்டு சதவீதமாக உள்ளனர்.



நாட்டில் ஓபிசி சமூகத்தினர் எத்தனை சதவீதம் பேர் உள்ளனர் என்பது குறித்த விவரம் யாருக்குமே தெரியாது. எந்தெந்த சாதிகள் எத்தனை சதவீதம் பேர் உள்ளனர் என நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். இது ஒவ்வொரு இந்திய மக்களின் கேள்வியாகவும் இருக்கிறது. நிச்சயமாக சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். உதாரணமாக, டெல்லியில் உள்ள 90 ஐஏஎஸ்களில் மூவர் மட்டுமே ஓபிசி பிரிவைச் சேர்ந்தவர்கள். சுகாதாரம் மற்றும் கல்வி சார்ந்த அமைப்புகளில் தலித்துகள் மற்றும் பழங்குடியினரை நீங்கள் காண முடியாது. நாட்டில் உள்ள 100 முன்னணி பன்னாட்டு நிறுவனத்தின் உரிமையாளர்களில் ஒருவர்கூட ஓபிசி பிரிவைச் சார்ந்தவர்கள் இல்லை. அதானி, டாடா, பிர்லா போன்ற பெயர்கள் மட்டுமே கேட்டிருப்போம்" என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "ஜார்க்கண்டில், எங்களுடைய அரசு பழங்குடியினருக்கு ஆதரவான அரசாகஇருக்கிறது. ஆனால் பாஜகவின் அரசு பழங்குடியினருக்கு எதிரானது. பாரத் ஜோடோ நியாய யாத்திரையானது நாட்டில் நடக்கும் அநீதிக்கு எதிரானது. தற்போது சமூக நீதி, பொருளாதார அநீதி, வேலைவாய்ப்பு பிரச்சினை உள்ளிட்டவற்றுக்காகவும் போராட வந்துள்ளோம்.

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி இந்தியா கூட்டணியில்தான் இருக்கிறார். இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான உறுப்பினர்கள் இன்னும் இந்தக் கூட்டணியில்தான் உறுப்பினர்களாக உள்ளனர். நிதிஷ் குமார் மட்டுமே இந்தியாகூட்டணியில் இருந்து வெளியேறி, பாஜகவுடன் இணைந்துள்ளார். அவர் வெளியேறியதற்கான காரணங்கள் என்ன என்பதை உங்களால் யூகிக்க முடியும். அது பரவாயில்லை. பிஹாரில் இந்தியா கூட்டணியை சேர்ந்த அனைவரும் இணைந்து போராடுவோம்" என்றார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# மெரினாவில் மெல்லிசை இசைத்து அசத்தும் பெண் காவலர்கள்

சென்னை, பிப். 7-

மெரினா கடற்கரையில் நடைபெறும் பெண் காவலர்கள் இசைக்குழுவின் இன்னிசை சுற்றுலாப் பயணிகளை மகிழ்வித்து வருகிறது. குற்றச் செயல்களை கட்டுப்படுத்தவும், மாநிலத்தின் சட்டம் - ஒழுங்கை நிலை நாட்டவும் போலீஸார் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

மேலும், பொது மக்களுடன் நல்லுறவை மேம்படுத்தவும் முயற்சி மேற்கொண்டுள்ளனர். அதன் ஒரு பகுதியாக மெரினா கடற்கரையில் உழைப்பாளர் சிலை அருகில் புதிதாக காவல் துறையின் இசைக் குழுவினர் இசை நிகழ்ச்சியை நடத்தி வருகின்றனர்.



வாரந்தோறும் சனிக்கிழமை மாலை 5 முதல் 6 மணி வரை ஒரு மணி நேரம் நடைபெறும் இந்த நிகழ்ச்சி, இசை விருந்து படைப்பதுபோல் உள்ளதாக சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். பாடல்களை இசைப்பதோடு, நடனமுடன் இசை வாத்தியங்களை பயன்படுத்தி வருவது நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

இதுபோன்ற இசை நிகழ்ச்சிகள் ஏற்கெனவே லண்டன், டோக்கியோ, பாரிஸ் மற்றும் நியூயார்க் போன்ற பெருநகரங்களில் பொது இடங்களில் அந்தந்த நாட்டு காவல் துறையினரின் இசை குழுவினரால் நடத்தப்பட்டு வருகிறது. இந்த வரிசையில் இசை நிகழ்ச்சி நடத்தும் மற்றொரு பெருநகர காவல்துறையாக சென்னை பெருநகர காவல்துறை உருவாகி உள்ளது.

போலீஸாரின் இசை நிகழ்ச்சியை குடும்பத்துடன் நேரில் கேட்டு மகிழ்ந்த சுற்றுலாப் பயணி கமலேஷ் கூறும்போது, 'கூலி வேலை செய்துவருகிறேன். அதிகளவில் செலவு செய்து சினிமா, வணிக வளாகங்களுக்கு செல்ல போதிய பண வசதி இல்லை. கையில் குறைந்த அளவு பணம் இருந்தால்கூட போதும். மெரினா சென்று மகிழ்ச்சியாக இருக்கலாம். அதன் அடிப்படையிலேயே நான் மெரினா வந்துள்ளேன். தற்போது போலீஸார் நடத்திய இசை நிகழ்ச்சியை குடும்பத்தோடு பார்த்து ரசித்தேன். இது மகிழ்ச்சியையும், மன நிறைவையும் தருகிறது' என்றார்.

இதுகுறித்து சென்னை காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் கூறும்போது, 'இந்தியாவில் முதன் முறையாக சென்னை பெருநகர காவல் துறையில் அண்மையில் இணைக்கப்பட்ட அனைத்து மகளிர் பேக் பைப்பர் இசைக்குழுவினர் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளனர். தற்போது நடத்தப்பட்டு வரும் இசை நிகழ்ச்சி, பொது மக்களுடனான உறவுகளை கட்டமைக்கவும், காவல் துறையினருக்கும் சமூகத்துக்கும் இடையே ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் உதவும். இந்த இசை நிகழ்ச்சியை பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் இலவசமாகவே கண்டுகளிக்கலாம் என்றார்.

சென்னை பெருநகர காவல் துறையின் பேண்டு மற்றும் பெண்கள் பேக் பைப்பர் இசை நிகழ்ச்சியை சென்னை காவல்துறை தலைமையிட இணை ஆணையர் கயல்விழி கண்காணித்து வருகிறார். நீங்களும் வாங்க, மெரினாவில் காவல் துறையின் இசை நிகழ்ச்சியை இலவசமாக கண்டு ரசிக்கலாம் என காவல்துறை அழைக்கிறது.

# ராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேரை விடுதலை செய்தது இலங்கை நீதிமன்றம்

## 2 விசைப்படகுகளை நாட்டுடைமை ஆக்கவும் உத்தரவு

கொழும்பு, பிப். 7-

ராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேரை விடுதலை செய்து இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடந்த மாதம் 22ம் தேதி மீன்பிடிப்பதற்கான அனுமதி சீட்டை பெற்று சுமார் 400க்கும் மேற்பட்ட நிலையில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். இவர்கள் கச்சத்தீவு, நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படை வீரர்கள், மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் தடுத்து நிறுத்தி விரட்டியடித்தனர். இதை தொடர்ந்து 2 விசைப்படகுகளையும், அதில் இருந்த 6 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் சிறைபடித்தனர்.



சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களை இலங்கை கடற்படையினர் எல்லைதாண்டி மீன்பிடித்ததாக வழக்குப்பதிவு செய்து ஊர்காவல்த்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். ஆஜர்படுத்தப்பட்ட மீனவர்களை இலங்கை சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில், நீதிமன்ற காவல் முடிந்து மீனவர்கள் 6 பேரையும், நேற்று ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அப்போது மீனவர்களிடம் விசாரணை நடத்திய நீதிபதி, மீனவர்கள் 6 பேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டார்.

மேலும் சிறைபிடிக்கப்பட்ட 2 விசைப்படகுகளை அரசுடமையாக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இது ராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. மீனவர்களை விடுதலை செய்தது மகிழ்ச்சி அளித்தாலும், மீனவர்களின் வாழ்வாதாரமான 2 படகுகளை இலங்கை அரசுடைமையாக்கியது வேதனை அளிப்பதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் ஓரிரு நாளில் தாயகம் திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது



காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பாக மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் அறிவுறுத்தலின் பேரில் சாலை பாதுகாப்பு மாத நிகழ்வு பல்வேறு துறைகள் சார்பாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்று வரும் நிலையில் வட்டாரப் போக்குவரத்து துறை சார்பாக சிறப்பு வாகன சோதனை நடத்தப்பட்டது. இதில் வேகக்கட்டுப்பாட்டு கருவி, ஜி பி எஸ் கருவி பொருத்தாத வாகனங்கள் மற்றும் சரியான ஆவணங்கள் இல்லாத தனியார் பள்ளி வாகனம் உள்ளிட்ட வாகனங்களுக்கு அதன் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இந்நிகழ்வில் வட்டார போக்குவரத்து அதிகாரி பிரபாகரராவ் மோட்டார் வாகன உதவியாளர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட போக்குவரத்து துறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உடன் இருந்தனர்.

# மத்தியப் பிரதேச மாநிலம் ஹர்தாவிலுள்ள பட்டாசு ஆலையில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 6 பேர் பலி, 60 பேர் காயம்

போபால், பிப். 7-

மத்தியப் பிரதேச மாநிலம் ஹர்தாவிலுள்ள பட்டாசு ஆலையில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். 60 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த பயங்கர விபத்தினால் எழுந்த தீ மற்றும் புகையினால் அருகில் உள்ள இடங்களில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.



இந்த பயங்கர விபத்தில் படுகாயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த வெடிவிபத்தின் தீவிரத்தால் அருகிலுள்ள நர்மதாபுரம் மாவட்டத்தின் சியோனி மால்வாவிலும் அதிர்வுகள் உணரப்பட்டதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

இந்த கோர சம்பவம் குறித்து அதிகாரிகளுடன் பேசியுள்ள மத்தியப் பிரதேச முதல்வர் மோகன் யாதவ், விபத்து குறித்து முழு தகவல்களையும் வழங்கும்படி கேட்டுள்ளார். இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "ஹர்தாவில் உள்ள பட்டாசு ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டுள்ளதாக துயரமான செய்தி வந்துள்ளது. அமைச்சர் உதய் பிரதாப் சிங் மற்றும் மூத்த அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர். இந்தூர் மற்றும் போபாலில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தீய காய பிரிவுகள் தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்கு கூடுதலாக தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டுள்ளன" என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, விபத்து குறித்து வெளியான வீடியோவில், பட்டாசு ஆலையில் இருந்து நீண்ட தீ ஜுவாலையும், புகையும் வெளியேறுவதையும், வெடிச் சத்தம் பெரிதாக கேட்டதால் அருகில் உள்ள சாலைகளில் மக்கள் பயத்துடன் ஓடுவதையும் காணமுடிந்தது.

விபத்து நடந்த ஆலைக்கு விரைந்து வந்த தீயணைப்பு வாகனங்கள், தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் ரிஷி கார்க் கூறுகையில், "மீட்பு பணிகள் தொடங்கியுள்ளது. நாங்கள் தேசிய பேரிடர் மீட்பு படையின் உதவியையும் நாடியுள்ளோம்" என்று தெரிவித்துள்ளார்.

விபத்தில் இருந்து தப்பியோடி பிழைத்து வந்த ஊழியர் ஒருவர் கூறுகையில், "வெடி விபத்து சம்பவத்தின் போது ஆலையில் 150 தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தனர்" என்று தெரிவித்தார்.

# புதுக்கோட்டை மாவட்ட இந்திய ரெட் கிராஸ் சார்பில் மருத்துவ முகாம்

புதுக்கோட்டை : பிப். 7-

புதுக்கோட்டை மாவட்ட இந்திய ரெட் கிராஸ் மற்றும் புதுக்கோட்டை முத்துமீனாட்சி மருத்துவமனையும் இணைந்து குன்னண்டார்கோவில் ஒன்றியம் வைத்தூரில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. பல்வேறு நோய்களுக்கான பொது மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டு மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டன. தொடர்ந்து தொடர் சிகிச்சை தேவையானவர்களுக்கு விழிப்புணர்வுஏற்படுத்தப்பட்டது. இந்த முகாமில் 150 க்கு மேற்பட்டோர் பங்கு பெற்று பயனடைந்தனர். இதுபோன்ற முகாம்களை தொடர்ந்து நடத்திடுமாறு பொதுமக்கள் முகாம் ஏற்பாட்டாளர்களை கேட்டுக் கொண்டனர்.



முகாமில் முத்துமீனாட்சி மருத்துவமனை மருத்துவர்கள் சரவணன், அகில், புவனேஸ்வரி மற்றும் தொழில்நுட்பபணியாளர்களும் நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளித்தனர். புதுக்கோட்டை மாவட்ட ரெட் கிராஸ் செயலாளர். டாக்டர் முத்து மீனாட்சி மருத்துவமனை மக்கள் தொடர்பு அலுவலர் வெள்ளைச்சாமி, ஊராட்சி மன்ற தலைவர் தீபா நாகராஜன் ஆகியோர் முகாம் ஏற்பாடுகளை செய்திருந்தனர். மாவட்ட ரெட் கிராஸ் சேர்மன் டாக்டர் ராமதாஸ், துணைத் தலைவர் ஜி எஸ் தணபதி, பொருளாளர் மத்தியாஸ், தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் ஆனந்தன், ஊராட்சி உறுப்பினர் நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தனி ஒரு விவசாயி பாதிப்படைந்தாலும் உரிய இழப்பீட்டை பெற்று தர வேண்டும்

கறம்பக்குடி : பிப். 7-

தமிழக அரசுக்கு தமாகா விவசாய அணி மாநில தலைவர் துவார் ரெங்கராஜன் விடுத்துள்ள கோரிக்கையில், தமிழகத்தில் சம்பா சாகுபடி செய்த விவசாயிகள் போதிய மழை இல்லாததால் தாங்கள் பயிர் செய்த நெற்பயிர்கள் கதிர் வரும் தருவாயில் கருகி வீணாகி மிகுந்த நஷ்டத்தை விவசாயிகள் சந்தித்துள்ளனர்.

அதே வேளையில் ஆழ்துளை கிணறு மூலம் விவசாயம் செய்தவர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை. ஏரி குளங்களை நம்பி விவசாயம் செய்தவர்கள் மிகுந்த பாதிப்படைந்து உள்ளனர். அவர்களுக்கான இழப்பீட்டை பயிர் காப்பீட்டையும் வழங்க ராண்டமாக கணக்கெடுக்கும் போது நல்ல விளைச்சல் கண்ட புல எண் வருமானால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைப்பதில் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே தமிழக அரசு ஒரு கிராமத்தில் யார் யார் பாதிப்படைந்துள்ளனர் என்பதை வட்டார வேளாண் அதிகாரிகளை கொண்டு கிராமங்கள் வாரியாக கணக்கெடுத்து, பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைத்திட வழிவகை செய்திட வேண்டும். தாங்கள் தேர்தல் அறிக்கையில் கூறியபடி இழப்பீடு கிடைத்திட வழிவகை செய்திட வேண்டும். அவ்வாறு செய்தால்தான் உண்மையாக பாதிப்படைந்த விவசாயி பலன் பெறுவார்கள் என தமாகா விவசாய அணி மாநில தலைவர் துவார் சி.ரெங்கராஜன் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார்.

### தமிழகத்துக்கான வெள்ள நிவாரண விவகாரம்

# நாடாளுமன்றத்தில் திமுக – பாஜக எம்.பி.,க்களிடையே காரசார விவாதம்

புதுடெல்லி : பிப். 7-

தமிழகத்துக்கு வெள்ள நிவாரணநிதியைவழங்குவதில் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படுவதாக மக்களவையில் திமுக குற்றம் சாட்டியதை அடுத்து, திமுக - பாஜக எம்பி.,க்களிடையே காரசார விவாதம் நடைபெற்றது.

நாடாளுமன்ற மக்களவையில் நேற்று பேசிய திமுக எம்பி ஆ. ராசா, "தமிழகத்துக்கு வெள்ள நிவாரண நிதி வழங்குவதில் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது. பாஜக ஆளும் மாநிலங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்கு வழங்கப்படுவதில்லை. இது தொடர்பாக பல முறை கேள்வி எழுப்பியும் அரசு பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கிறது" என விமர்சித்தார்.



அதற்கு பதில் அளித்த மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த ராய், "மாநில பேரிடர் நிவாரண நிதி தொகுப்பில் உள்ள நிதி ரூ. 2,013 கோடியை மாநில அரசு பயன்படுத்தி இருக்கிறது. மாநில பேரிடர் நிவாரண நிதி தொகுப்புக்கு மத்திய அரசு முன்கூட்டியே நிதி ஒதுக்கி உள்ளது. 2010-15-ல் பேரிடர் நிவாரண நிதியாக ரூ. 33,591 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது. 2015-20ல் இது ரூ.61,220 கோடியாக உயர்த்தப்பட்டது. 2021-26-ல் இது ரூ.1.38 லட்சம் கோடியாக உயர்த்தப்பட உள்ளது" என விளக்கம் அளித்தார்.

அதற்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழகத்துக்கு நிதி ஒதுக்காதது ஏன் என திமுக தரப்பில் டி.ஆர். பாலு கேள்வி எழுப்பினார். அப்போது, மத்திய இணை அமைச்சர் முருகன் எழுந்து பதிலளித்தபோது, அவரைப் பார்த்து உட்காரும்படி டி.ஆர். பாலு கையசைத்தார். இதையடுத்து, இரு தரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அவையில் அமளி நிலவிய நிலையில், மத்திய அரசு நிதி ஒதுக்காததைக் கண்டித்து வெளிநடப்பு செய்வதாகக் கூறி திமுக எம்பிக்கள் வெளிநடப்பு செய்தனர். திமுக எம்பிக்களோடு கூட்டணி கட்சிகளின் எம்பிக்களும் வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திமுக எம்பி டி.ஆர்.பாலு, "வெள்ள நிவாரண நிதி தொடர்பான கேள்விக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்தான் பதில் அளிக்க வேண்டும். சம்பந்தமில்லாத அமைச்சரான முருகன் எழுந்து பதில் அளித்தார். அதோடு, தமிழகத்துக்கு நிவாரண நிதி வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் பேசும்போது, எங்கள் பேச்சுக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் எனும் நோக்கோடு முருகன் செயல்பட்டார். தமிழகத்தை மத்திய அரசு புறக்கணிக்கிறது; ஓரவஞ்சனையாக நடத்துகிறது. இதைக் கண்டித்து நாளை நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலை முன்பாக திமுக எம்பிக்கள் கருப்புச் சட்டை அணிந்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார்கள்" என தெரிவித்தார்.

# தமிழக மக்களின் உரிமைகளை மீட்க ஸ்டாலின் குரல் நிகழ்ச்சி




*நாகர்கோவில் : பிப்.7,*

*தேராகால்புதூர், கங்கா கிராண்டியூர் திருமண மண்டபத்தில் தமிழக மக்களின் உரிமைகளை மீட்க ஸ்டாலின் குரல் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*தமிழக முதலமைச்சர் அறிவுரையின்படி திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் நாடாளுமன்றத்தில் தமிழகத்தின் குரலாய் ஒலித்திட வேண்டி நமது கோரிக்கைகளை வேண்டிப்பெற கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி தலைமையில் 2024 நாடாளுமன்ற தேர்தல் வாக்குறுதி தயாரிப்புக்குழுவிடம் கடையநல்லூர் நகரச் செயலாளர் எஸ். அப்பாஸ் நகரத்திற்கான கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் தென்காசிதெற்குமாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன், தமிழக பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், டெல்லி தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், அரசு தலைமை கொறடா கோவி.செழியன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், மாநில மருத்துவர் அணி துணை அமைப்பாளர் செ.சு. செண்பக விநாயகம், கலை இலக்கிய அணி கருப்பண்ணன், காளிமுத்து, எஸ்.எம். அப்துல் மஜீத், சாகுல் ஹமீது, தென்காசி தெற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் குமார், ரபீக், காலித் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

# கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு எதிரான லாவலின் வழக்கில் மே மாதம் விசாரணை : உச்ச நீதிமன்றம் தகவல்

புதுடெல்லி : பிப். 7-

கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு எதிரான லாவலின் ஊழல் முறைகேடு வழக்கு மே மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.



கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் உள்ள பள்ளிவாசல், செங்குளம், பன்னியார் ஆகிய மூன்று இடங்களில் செயல்பட்டு வந்த நீர்மின் நிலையங்களை புனரமைக்க கடந்த 1995ம் ஆண்டு கேரள அரசு, கனடாவின் எஸ்என்சி - லாவலின் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்த நீர்மின் நிலையங்கள் நல்ல நிலையில் இருப்பதாகவும், அவற்றின் ஜெனரேட்டர்களின் திறனை மேம்படுத்தினால் போதும் என்றும் மத்திய மின்சார ஆணையம் தனது பரிந்துரையை அளித்த நிலையில், அதனை புறக்கணித்து இந்த ஒப்பந்தத்தை கேரள அரசு மின்சார வாரியம் மேற்கொண்டதாகவும் புகார் எழுந்தது. மேலும், இந்த ஒப்பந்தத்தால் கேரள அரசு மின்சார வாரியத்துக்கு ரூ. 86.25 கோடி இழப்பு ஏற்படுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த முறைகேட்டில், அப்போதைய மின்சாரத் துறை அமைச்சர் பினராயி விஜயன் உள்பட 7 பேருக்கு தொடர்பு இருப்பதாகக் கூறி சிபிஐ வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டது. அது தனது அறிக்கையில், லாவலின் நிறுவனத்தின் விருந்தினராக கடந்த 1997-ம் ஆண்டு பினராயி விஜயன் கனடாவுக்குச் சென்றதாகவும், வெறும் ஆலோசனை நிறுவனமான லாவலினிடம், நீர்மின் நிலையத்தை புனரமைக்கும் பணி ஒப்படைக்கப்பட்டதில் உள்நோக்கம் இருந்ததாகவும் குற்றம் சாட்டி இருந்தது.

இந்த வழக்கை விசாரித்த சிபிஐ சிறப்பு நீதிமன்றம், சிபிஐ தனது குற்றச்சாட்டை நிரூபிக்கவில்லை எனக் கூறி கடந்த 2013-ம் ஆண்டு பினராயி விஜயனையும் மற்ற 6 பேரையும் விடுவித்தது.

இதையடுத்து, இந்த வழக்கு கேரள உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. 2017-ம் ஆண்டு கேரள உயர்நீதிமன்றம், பினராயி விஜயன் உள்ளிட்டோரை விடுவித்து உத்தரவிட்டது. கேரள உயர் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து அதே ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. எனினும், இந்த வழக்கு இன்னும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சூர்யகாந்த் மற்றும் கே.வி.விஸ்வநாதன் அடங்கிய அமர்வு முன் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் எஸ்.வி.ராஜூ, கடந்த 2017 முதல் இந்த வழக்கு தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு வருவதாக முறையிட்டார். வழக்கை மார்ச் அல்லது ஏப்ரலுக்குள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். மார்ச், ஏப்ரல் மாதங்களில் விசாரணை மேற்கொள்ள வாய்ப்பில்லை என்று தெரிவித்த உச்ச நீதிமன்றம், மே 1 மற்றும் 2 ஆகிய தேதிகளில் விசாரணை நடத்தப்படும் என்று கூறியது.

# பொறையார் பகுதியில் மின்னணு வாக்குப்பதிவு செயல்விளக்க பிரசாரம்




தரங்கம்பாடி, பிப்.7–

மயிலாடுதுறை மாவட்ட பகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் செயல்விளக்க பிரசார விழிப்புணர்வுமாவட்ட ஆட்சியர் ஏபி மகாபாரதி அறிவுறுத்தலின் பேரில் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் தரங்கம்பாடி தாலுகாவில் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலைமுன்னிட்டுமின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் எப்படி வாக்களிப்பது என பொதுமக்களுக்கு செயல் விளக்கத்தை, செம்பனார்கோவில், தரங்கம்பாடி, பொறையார், திருக்களாச்சேரி, இலுப்பூர், உத்திரங்குடி, எரவாஞ்சேரி, திருவிளையாடல் உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் அதிக கூடும் பகுங மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் எப்படி வாக்களிப்பது என பொதுமக்களுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் விழிப்புணர்வு வாகனம் நிறுத்தப்பட்டு, அதில் உள்ள ஒலி, ஒளி திரையுடன், மாதிரி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் உதவியுடன் எப்படி வாக்குப்பதிவு செய்வது என்று விளக்கம் அளிக்கப்பட்டது.

இதனைக்கேட்டும்,பார்த்தும் செயல்பாடுகளை தெரிந்து கொண்ட பொதுமக்களின் சந்தேகங்களுக்கு வட்டாட்சியர் சரவணன், தேர்தல் பிரிவு தனித்துணை வட்டாட்சியர் பாபு ஆகியோர் பொதுமக்களிடையே வாக்கு அளிப்பதன் அவசியம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்குப்பதிவு செய்வது குறித்து உரியசெயல்விளக்கம் அளித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் கிராம நிர்வாக அலுவலர்கள் அருள்மொழி, சுதாகர், உதவியாளர்கள் அசோக்குமார், ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பழங்குடியினர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் முகாம்

தரங்கம்பாடி, பிப். 7–

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா, செம்பனார்கோயில், ஆறுபாதிகாவல்நிலையத்திற்கு எதிரே வசித்து வரும் இந்து ஆதியன் மற்றும் இந்து மலைக்குறவன் சாதியை சேர்ந்த பழங்குடியினர்கள் ஏற்கனவே ஆதார் அட்டை மற்றும் மின்னணு குடும்ப அட்டை பெற்றிருந்த நிலையில் இவர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை வழங்கிட ஏதுவாக தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் இணையதளம் வாயிலாக படிவம்-6 பெறப்பட்டது.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி உத்தரவின்பேரில் மேற்காணும் பணியினை தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் வட்டாட்சியர் சரவணன் தலைமையில் மலைக்குறவர்கள் மற்றும் பழங்குடியினர்களுக்கு வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான முகாம் நடைபெற்றது. இதில் தரங்கம்பாடி தாலுக்கா தேர்தல் துணை வட்டாட்சியர் பாபு, மண்டல துணை வட்டாட்சியர் பாலமுருகன், முதுநிலை வருவாய் ஆய்வாளர் பாலாஜி மற்றும் அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

# சீர்காழி அருகே வெளியுலகமே காணாத நரிக்குறவர் இன மாணவர்களை புத்தகக் கண்காட்சிக்கு அழைத்து சென்ற வட்டாட்சியர் – குவியும் பாராட்டுகள்




சீர்காழி. பிப், 7–

மயிலாடுதுறை மாவட்டத்தில் அரசு சார்பில் புத்தக கண்காட்சி தொடங்கியுள்ளது. வருகிற 12 ஆம் தேதி வரை நடைபெறும் இந்த புத்தக கண்காட்சியை பெருந்திரளான பொதுமக்களும் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளும் நாள்தோறும் கண்டு மகிழ்ந்து வருகின்றனர்.

அந்த வகையில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழிஅருகேஅரசூர்பகுதியில் வசித்து வரும் நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த மாணவ – மாணவிகள் வெளியுலகமே அறியாமல் இருக்கும் செய்தி அறிந்த சீர்காழி வட்டாட்சியர் இளங்கோவன், மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் எண்ணத்தில் அனைவரையும் புத்தகக் கண்காட்சிக்கு அழைத்து செல்ல முடிவு செய்துள்ளார்.

இதற்காக தனது சொந்த பணத்தில் இரண்டு வேன்களை வாடகைக்கு எடுத்து அதில் 50க்கும் மேற்பட்ட மாணவ – மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களை அழைத்துக்கொண்டு மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம் கலை – அறிவியல் கல்லூரியில்நடைபெறும்புத்தக கண்காட்சிக்கு சென்றுள்ளார்.

அங்கு சென்ற மாணவிகள் அனைத்து புத்தக அரங்குகளையும், அறிவியல் சார்ந்த நிகழ்வுகளையும் கண்டு மிகவும் வியப்பில் ஆழ்ந்தனர். அதோடு மட்டுமின்றி புத்தக கண்காட்சியை கண்டு மகிழ்ச்சியில் திளைத்திருந்த மாணவர்களுக்கு, அவர்கள் கேட்ட அனைத்து நூல்களையும் தனது சொந்த பணத்திலேயே வாங்கி கொடுத்து அசத்தியுள்ளார் வட்டாட்சியர் இளங்கோவன். இதனை அடுத்து சீர்காழி கோட்டாட்சியர் அர்ச்சனா தனது கரங்களால் மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்கினார்.

வெளியுலகம் அறியாத இந்த மாணவர்களின் கனவுகளை நினைவாக்கியத்துடன் அவர்களுக்கு தாயன்போடு வேண்டிய புத்தகங்களையும் வாங்கி கொடுத்ததை பெரிதும் பாராட்டுகின்றனர் பெற்றோர்கள். ஒவ்வொரு அரங்கிற்கும் சென்று மாணவர்களை மெதுவாக புத்தகங்களை வாசிக்க வைத்து, அவர்களுக்கு தேவையான உணவு பொருட்களையும் வாங்கி கொடுத்து உண்மையிலேயே அவர்களின் கனவு நாயகனாக மாறி இருக்கிறார்.

வட்டாட்சியரின் இந்த அற்புதமான செயலை கண்டு அங்கிருந்து மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், கண்காட்சிக்கு வந்த சிறப்பு விருந்தினர்கள், தமிழ் ஆர்வலர்கள் என அனைவரும் வாழ்த்து தெரிவித்தனர். வாழ்க்கையில் ஒரு முறையாவது இதுபோன்ற இடங்களுக்கு சென்றுவிட மாட்டோமா என்ற அந்த மாணவர்கள் எண்ணத்தில் குத்துவிளக்கு ஏற்றி வைத்த வட்டாட்சியருக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகிறது.

# புதுச்சேரி மகாகவி பாரதியார் நினைவு அருங்காட்சியகம் ஆய்வு மையத்தில் மகாகவி பாரதி பற்றாளர் மாநாடு

புதுச்சேரி. பிப், 7–

புதுச்சேரி மகாகவி பாரதியார் நினைவு அருங்காட்சியகம் ஆய்வு மையத்தில் மகாகவி பாரதி பற்றாளர் மாநாடு நடைபெற்றது. இதில் பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமிநாராயணன் பங்கேற்று நூல்களை வெளியிட்டு மாநாட்டில் சிறப்புரையாற்றினர்.

திருவள்ளுவர் ஆண்டு 2055 அருட்பிரகாச வள்ளலார் 200 மகாகவி பாரதியின்142 வது பிறந்தநாள் ஆகியவற்றை திருவள்ளுவர் உலக சாதனையாளர் அமைப்பு, மகாகவி பாரதியார் தமிழ் கழகம் மற்றும் யோகி பதிப்பகம் இணைந்து நடத்திய மகாகவி பாரதியார் பற்றாளர் மாநாட்டில் கவியரங்கம் கருத்தரங்கம் மற்றும் நூல் வெளியீடு சாதனையாளர்களுக்கு விருது வழங்குதல் என பல நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் சிறப்பு



விருந்தினராக பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன் சிறப்புரை ஆற்றி நூல்களை வெளியிட்டார் ..மேலும் இந்நிகழ்வில் புதுச்சேரி அரசு கலை பண்பாட்டு துறை இயக்குனர் கலியபெருமாள் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார். புதுவை தமிழ்ச் சங்க செயலாளர் சீனு மோகன் தாஸ் வழக்கறிஞர் முனைவர் மோகன் தாஸ் நியூசிலாந்து கல்வியாளர் இலக்குவன் திருவள்ளுவர் உலக சாதனை அமைப்பின் நிறுவனர் சரவணன் மற்றும் சொக்கலிங்கம் கவிஞர் ஞானசேகரன் பேராசிரியர் சம்பத் கவிஞர் சோமசுந்தரம் ஆகியோர் பங்கேற்று விழாவினை சிறப்பு செய்தனர்.

இவ்விழாவில் காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த கவிஞர் . அ கனகவள்ளிக்கு அவரது இலக்கியப் பணியினை பாராட்டி மகாகவி பாரதி கவிச்சிற்பி விருது 2024 மற்றும் அவர் மகாகவி பாரதியாரைப் பற்றி எழுதிய கவிதையை பாராட்டி பாரதி கவிச்சுடர் விருது மற்றும் மெடல் வழங்கிகௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாரதி பற்றாளர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்தார்கள் ..

*அரசு கலை, அறிவியல் கல்லூரியின்*

# நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு



செங்கல்பட்டு. பிப், 7–

செங்கல்பட்டு பெரும்பாக்கம் அரசு கலை, (மற்றும்) அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்டம், (மற்றும்) போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வுக்குழு, (மற்றும்) அனைத்து மக்கள் சக்தி இயக்கம் இணைந்து நடத்திய சைபர் கிரைம், (மற்றும்) போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வுநிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் சக்தி தலைமை உரையாற்றி பேரணியை தொடங்கி வைத்தார். செம்மஞ்சேரி சரகம், காவல்துறை உதவி ஆணையர் ஆர்.வைஷ்ணவி சிறப்புரையாற்றினர்.

மற்றும் பெரும்பாக்கம் காவல் ஆய்வாளர் சண்முகம் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் அனைத்து மக்கள் சக்தி இயக்கத்தின் தலைவர் டாக்டர் கலைமகன் வெங்கடேசன் கருத்துரை வழங்கினார்.

இதனை தொடர்ந்து, பல்லாயிரக்கணக்கான மக்களை சென்றடையும் விதத்தில் இந்த விழிப்புணர்வு பேரணி கல்லூரியில் துவங்கி செம்மஞ்சேரி நுழைவு வாயில் வரை நடைபெற்றது. அதனையடுத்து,பேரணிமற்றும் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சுமார் 300-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு உணவு , பிஸ்கட் பாக்கெட்டுகள், தண்ணீர் பாட்டில்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அனைத்து மக்கள் சக்தி இயக்கத்தின் மகளிர் அணியின்கீதா கலைமகன், செம்மஞ்சேரி பெரும்பாக்கம் ஒருங்கிணைப்பாளர்கள் திவ்யா, பிரியா, மைதிலி, இந்திராணியம்மாள், பானுமதி செம்மஞ்சேரி செயல் தலைவர் லட்சுமணன் சிங்கம், மாணவரணிராகவன், தேவராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் பேரணியில் பங்கேற்றனர்.


# திருவள்ளுவர் பல்கலை.யில் அறிவியல் கண்காட்சி

வேலூர். பிப், 7–

வேலூர்மாவட்டம்திருவலம் அருகேதிருவள்ளுவர் பல்கலை கழகம் இயங்கி வருகிறது. இங்கு இதுவரை இல்லாத அளவிற்கு முதல் முறையாக பெரிய அளவிலான அறிவியல் கண்காட்சி நடத்தப்படுகிறது.

இது குறித்து பல்கலை கழகத்தின் துணைவேந்தர் ஆறுமுகம் நிருபர்களை சந்தித்து பேசும்போது, இன்று முதல் 4 நாட்களுக்கு அறிவியல் கண்காட்சி நடை பெறுவதாக கூறினார். மைக்ரோ பயாலஜி சுற்று சூழல் சமூக அறிவியல் துறைகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன. முதுநிலை 5 ஆண்டு இன்டகரேட்டேடு படிப்புகள் தொடங்க இருக்கிறோம்.

திருவள்ளுவர் பல்கலை கழகத்தின் கீழ் வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய 4 மாவட்டங்களில் 80 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அந்த கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களை அறிவியல் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், 7ம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை அறிவியல் கண்காட்சி நடத்தப்பட உள்ளது.



இதில் பல கல்லூரிகளை சேர்ந்த மாணவர்கள் தங்கள் கண்டு பிடிப்புகளை காட்சிப்படுத்த உள்ளனர். பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. 100 அரங்குகள் அமைக்கப்பட்டு 10 தலைப்புகளில் போட்டிகள் நடத்தப்பட உள்ளன. இதுவரை இவ்வளவு பெரிய அளவிலான கண்காட்சி திருவள்ளுவர் பல்கலை கழகத்தில் நடைபெற்றது இல்லை. இதுவே முதல் முறை என்றார்.

இந்தாண்டு, மைக்ரோ பயாலஜி, சுற்று சூழல் மற்றும் சமூக அறிவியல் துறைகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் முதுநிலை 5 ஆண்டு இன்டகரேட்டேடு படிப்புகள் தொடங்க இருக்கிறோம் என்றும் ஆறுமுகம் கூறினார். பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் இ-மேனேஜ்மென்ட் என்ற ஆப் துவக்கப்பட்டுள்ளது.



▶ வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான வே.இரா. சுப்புலெட்சுமி, தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட உள்ள வேலூர் பாராளுமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, வேலூர் காவல் துணை கண்காணிப்பாளர் திருநாவுக்கரசு, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜெயராமன், வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் உட்பட பலர் உடன் இருந்தனர்.



▶ பொதுப்பணித்துறை மூலம் எஸ்.சி.எஸ்.பி. சிறப்பு கூறு நிதி ரூபாய்-15,31,000/-மதிப்பீட்டில் காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு தொகுதி தொண்டமங்கலம் பகுதிக்கு தார் சாலை அமைப்பதற்கான பூமி பூஜை நெடுங்காடு கோட்டுச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சந்திர பிரியங்கா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

*ஐ.எஸ்.எல்) கால்பந்து போட்டி*

# பெங்களூரில் இன்று நடைபெறும் போட்டியில் வெற்றி பெறுவோம் சென்னையின் எப் சி அணி பயிற்சியாளர் உறுதி

பெங்களூர், பிப். 7–

இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) கால்பந்து தொடர் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்த சீசனில் 12 அணிகள் பங்கேற்றுள்ள 10-வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ். எல்) கால்பந்து தொடர் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இந்த தொடரில் பெங்களூருவில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் சென்னையின் எப்.சி. – பெங்களூரு அணிகள் மோத உள்ளன.



இதுவரை நடந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் சென்னை அணி 12 ஆட்டங்களில் ஆடி 3 வெற்றி, 6 தோல்வி, 3 டிரா கண்டு புள்ளிப்பட்டியலில் 9வது இடத்தில் உள்ளது. அதேவேளையில் 12 ஆட்டங்கள் ஆடியுள்ள பெங்களூரு அணி 2 வெற்றி, 5 டிரா, 6 தோல்வி கண்டு புள்ளிப்பட்டியலில் 11வது இடத்தில் உள்ளது.எனவே இன்று நடைபெறும் போட்டி இரு அணிகளுக்கும் மிக முக்கியமான போட்டியாகும், சென்னையின்எப்.சி அணியின் பயிற்சியாளர் சென்னையில் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கூறுகையில் இந்த போட்டியில் கண்டிப்பாக வென்று புள்ளி பட்டியலில் முன்னேறி செல்வோம் என தெரிவித்தார்.

# சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் 4 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்




ஊத்துக்கோட்டை, பிப். 7–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது. இக்கோவிலை கடந்த 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரூ.1.25 கோடி செலவில் புனரமைத்து மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.இதன்பின்னர், இக்கோவிலுக்கு நாளுக்கு, நாள் கூட்டம் கட்டுக்கடங்காத வகையில் வந்த வண்ணம் உள்ளது.

மேலும், இக்கோவிலுக்கு தொடர்ந்து ஆறு வாரங்கள் செவ்வாய்க்கிழமைகளில் வந்து நெய்தீபம் ஏற்றி வழிபட்டால்வீடு,நிலம்,வேலை வாய்ப்பு, திருமணம், பிள்ளைபேரு உள்ளிட்ட வேண்டுதல்கள் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது. இந்நிலையில், நேற்று முருகனுக்கு உகந்த தினமான செவ்வாய்க்கிழமையாகும். தை மாதத்தில் கடைசி செவ்வாய்க்கிழமை மற்றும் ஏகாதசி ஆகும்.எனவே, மூலவருக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு முத்தங்கி அலங்காரம் செய்யப்பட்டது.

நேற்று விடியற்காலை முதலே இக்கோவிலில் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.மேலும், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும்,ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் இக்கோவிலுக்கு வந்து நீண்ட வரிசையில் நின்று சுமார் 4 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.மேலும், பொது தரிசனம்,ரூ.100 கட்டண தரிசனம் உள்ளிட்ட வரிசையில் சுமார் 4 மணிநேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.இதனால் முதியவர்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோர் குடிநீர் இன்றியும்,கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

இதனால் பக்தர்கள் மிகவும் அவதிக்கு உள்ளானார்கள். கூட்டம் கட்டுக்கடங்காமல் வந்ததால் சிறுவாபுரி-புதுரோடு சாலையிலும்,சிறுவாபுரி-அகரம் சாலையிலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.மேலும்,சாலையின் இருபுறமும் வியாபாரிகள் சாலையை ஆக்கிரமிப்பு செய்து கடைகள் வைத்திருந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.இதனால் பெரியபாளையத்தில் இருந்து செங்குன்றம் செல்லும் தடம் எண்:547 பேருந்து ஓட்டுநர்கள் மிகவும் சிரமத்துடன் பேருந்துகளை இயக்கினர்.

எனவே, மாவட்ட கலெக்டர், இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள், மாவட்ட காவல்துறைகண்காணிப்பாளர் உள்ளிட்டோர் பக்தர்கள் விழா காலங்களிலும் செவ்வாய்க்கிழமைகளிலும் விரைவாக தரிசனம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்களும், பக்தர்களும்கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அரசு மருத்துவமனைகளை ஆய்வு

காட்டுமன்னார்கோவில், பிப். 7

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் வாண்டையார் இருப்பு, ஆயங்குடி ,ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளுக்கு வழங்கிய தளவாடப் பொருள்களை சட்டமன்ற உறுப்பினர் எம்.சிந்தனை செல்வன் திங்கட்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வாண்டையார் இருப்பு, ஆயங்குடி, சுகாதார நிலையங்களுக்கு தலா 2 லட்சம் வீதம் நான்கு லட்சமும் காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனைக்கு 2.5 லட்சம் என சுமார் 6.50 லட்சம் மதிப்பில் பீரோல்கள்,



நாற்காலிகள் ,ஏசி ,ராக்கைகள் என பல்வேறு தளவாட பொருட்கள் வழங்கப்பட்டது. இந்த பொருள்களை சட்டப்பேரவை உறுப்பினர் எம் சிந்தனைச்செல்வன் பார்வையிட்டார்.மேலும் மருத்துவர்களிடம் கூடுதலாக மருத்துவமனைகளுக்கு தேவையான தளவாட பொருட்கள் பற்றியும் கேட்டறிந்தார்.

ஆய்வின்போது காட்டுமன்னார்கோவில் தலைமை மருத்துவர் ரவிசங்கர் முதுநிலை மகப்பேறு மருத்துவர் ஜெயச்செல்வி ,கண் மருத்துவர் சரண்யா ,மற்றும் மருத்துவர்கள் வரதராஜன் ,செந்தில்குமார், வெங்கடேசன் மற்றும் கஸ்பா பாலா ,சக்திவேல், இளந்தமிழன் சிறுகாட்டு ரவி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திருச்சியில் நடைபெற்ற முதியோர் தடகளப் போட்டியில் சீர்காழி முதியவர் வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை

*சீர்காழி, பிப். 7–*

*முதியோர்களுக்கான மாநில அளவிலான தடகள போட்டிகள் திருச்சியில் நடைபெற்றது. குண்டு எறிதல், ஈட்டி எறிதல், வட்டு எறிதல், சங்கிலி குண்டு எறிதல் உள்ளிட்ட போட்டிகளில் ஏராளமான முதியோர்கள் கலந்து கொண்டனர்.*

*இதில் சீர்காழி அருகே திட்டைப் பகுதியைச் சேர்ந்த சுகாதார ஆய்வாளராக இருந்து ஓய்வு பெற்ற ராமசாமி என்ற 85- வயது முதியவர் பங்கு பெற்று இரண்டாம்*



*பரிசாக வெள்ளி பதக்கம் வென்று சீர்காழிக்கு பெருமை சேர்த்துள்ளார். இதனைத் தொடர்ந்து முதியவர் ராமசாமி தான் படித்த பள்ளிக்கு சென்று தற்போதைய தலைமை ஆசிரியர் அறிவுடைநம்பி, உடற்கல்வி இயக்குனர் முரளிதரன்,ஆகியோரிடம் வாழ்த்து பெற்றார்.*

*அப்போது உடற்கல்வி ஆசிரியர்கள் மார்கண்டன், ராகேஷ், கபிலன் ஆகியோர் உடன் இருந்தனர்.*

# “அமலாக்கத்துறை அச்சுறுத்தல்களுக்கு பயப்படமாட்டோம்” – டெல்லி அமைச்சர் அதிஷி

புதுடெல்லி : பிப். 7–



“கடந்த இரண்டு ஆண்டுகளாக அமலாக்கத்துறை சோதனைகள் மூலம் ஆம் ஆத்மி கட்சி தலைவர்களை அச்சுறுத்தி வருகின்றனர். ஆனால் அவர்களின் வீடுகளில் இருந்து ஒரு ரூபாய் கூட கைப்பற்ற முடியவில்லை. இந்த அச்சுறுத்தல்களுக்கு நாங்கள் பயப்பட மாட்டோம்” என்று டெல்லி பொதுப்பணித்துறை அமைச்சர் அதிஷி கூறியுள்ளார்.

டெல்லியில் ஆம் ஆத்மி கட்சித் தலைவர்கள் வீடுகளில் அமலாக்கத்துறை சோதனை நடத்திய நிலையில் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் அதிஷி “கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆம் ஆத்மி கட்சித் தலைவர்கள் சோதனைகள் மூலமாக அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர். மதுபான கொள்கை ஊழல் என்ற பெயரில் சிலரின் வீடுகளில் சோதனை நடத்தப்படுகிறது, சிலருக்கு சம்மன் அனுப்பப்படுகிறது மேலும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த இரண்டு ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான சோதனைகள் நடத்தப்பட்டும், அமலாக்கத்துறை இதுவரை ஒரு ரூபாயைக் கூட கைப்பற்றவில்லை.

ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக நீதிமன்றம் கூறிய நிலையிலும் இரண்டு ஆண்டுகளுக்கு பின்னரும் அமலாக்கத்துறை ஒரு உறுதியான ஆதாரத்தைக் கூட கண்டுபிடிக்கவில்லை. அரசுதரப்பு சாட்சியிடம் குறுக்கு விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை அளிக்கப்பட்டது. நீதிமன்றத்தில் வழங்கிய அறிக்கை மாறியிருந்தது. வீடியோ ஆதாரங்கள் வழங்கப்பட்டது, அதில் ஒலி நீக்கப்பட்டிருந்தது.

இப்போதும் ஆம் ஆத்மி கட்சியின் பொருளாளர், எம்.பி., என்.டி குப்தா, அரவிந்த் கேஜ்ரிவாலின் செயலாளர் மற்றும் கட்சித் தலைவர்கள் மற்றும் தொடர்புடையவர்கள் வீடுகளில் அமலாக்கத்துறையினர் சோதனை நேற்று நடத்தினர். மத்திய புலனாய்வு நிறுவனங்கள் மூலமாக பாஜக எங்கள் கட்சியை ஒடுக்க நினைக்கிறது. ஆனால் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லி கொள்கிறேன். நாங்கள் இதற்கெல்லாம் அஞ்சமாட்டோம்” என்று அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, டெல்லி முதல்வரின் தனிச் செயலாளர், ஆம் ஆத்மி கட்சி பிரமுகர்கள் சிலரின் வீடுகளில் பணமோசடி தொடர்பாக அமலாக்கத்துறையினர் நேற்று சோதனை நடத்தினர். முதல்வரின் தனிச்செயலாளர் பிபவ் குமார் மற்றும் டெல்லி ஜல் போர்டு (டிஜேபி) முன்னாள் உறுப்பினர் ஷலப் குமார் ஆகியோரின் வீடுகள், மேலும் சில ஆம் ஆத்மி கட்சியினர் வீடுகளிலும் சோதனை நடைபெற்றது. டெல்லி ஜல் போர்டில் வழங்கப்பட்ட டெண்டர் முறைகேடு தொடர்பாக இந்த பணமோசடி வழக்கு தொடரப்பட்டுள்ளது.

புதிய மதுபானக் கொள்கை தொடர்பான பணமோசடி வழக்கில் விசாரணைக்கு ஆஜராகும்படி அமலாக்கத்துறை அனுப்பிய 5வது சம்மனையும் டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் நிராகரித்து சில தினங்களுக்கு பின்னர் இந்தச் சோதனை நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

# களப்பாகுளம் பஞ்சாயத்து பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்



சங்கரன்கோவில் : பிப். 7–

சங்கரன்கோவில் யூனியன் களப்பாகுளம் பஞ்சாயத்து பகுதிகளில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளான பாரதி நகர், நேதாஜி நகர், தாசையா நகர், எழில் நகர், தென்றல் நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு உள்ளதாக அப்பகுதி மக்கள் ராஜா எம்எல்ஏவிடம் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் இதுகுறித்து உடனடியாக சங்கரன்கோவில் யூனியன் அலுவலகத்தில் அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ ஆலோசனை நடத்தினார்.

இதில் சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலாசங்கரபாண்டியன், குடிநீர் வடிகால் வாரிய உதவி நிர்வாக பொறியாளர் செல்லதுரை, வட்டார வளர்ச்சி அலுவலர் ராதா திருமலை, களப்பாகுளம் பஞ்சாயத்து தலைவர் சிவசங்கரி, வார்டு உறுப்பினர் அன்னராஜ் ஆகியோ பங்கேற்றனர். ஆலோசனையின் போது வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ குடிநீர் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் பழைய மின் மோட்டார்களை மாற்றி உடனடியாக போர் கால அடிப்படையில் புதிய மின் மோட்டார்கள் பொருத்தி பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க வேண்டும் என அதிகாரிகளை வலியுறுத்தினார். தொடர்ந்து குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் இதுகுறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர்.

# ஸ்பெயின் சுற்றுப்பயணம் நிறைவு இன்று தமிழகம் திரும்புகிறார் முதல்வர் ஸ்டாலின்

சென்னை : பிப். 7–

”நான் நாளை (இன்று–பிப். 7) ஸ்பெயினிலிருந்து புறப்படுகிறேன். சில நாட்களுக்குப் பிறகு உங்கள் அனைவரையும் பார்க்க ஆவலுடன் இருக்கிறேன். இது எனக்கு அளவில்லா மகிழ்ச்சியை அளிக்கிறது. அதேபோன்று, ஸ்பெயினில் உள்ள தமிழ் சமூகம் எனக்குக் காட்டிய அன்பான வரவேற்பு மற்றும் விருந்தோம்பலுக்கும் நன்றியுள்ளவனாவேன்” என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் கடந்த ஜனவரி 27 ஆம் தேதி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்பெயினுக்கு சென்றார். இவருடன் தமிழ்நாடு தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜாவும் ஸ்பெயினுக்கு சென்று இருந்தார். அங்கு பல்வேறு தொழில் முதலீட்டாளர்களை சந்தித்து தமிழகத்திற்கு தொழில் தொடங்க வர வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார். மேலும், முதலமைச்சர் முன்னிலையில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

இந்நிலையில் முதல்வர் ஸ்டாலின் இது குறித்து தனது எக்ஸ் தளத்தில், “ஸ்பெயினின் தொழில்துறை ஜாம்பவான்களான கெஸ்டாம்ப். டால்கோ மற்றும் எடிபன் ஆகிய நிறுவனங்களின் உயர் நிர்வாகிகளுடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை மேற்கொண்டேன். இந்தியாவின் உற்பத்தி தமிழ்நாட்டில் உள்ள எல்லையற்ற வாய்ப்புகளை அவர்களுக்கு எடுத்துரைத்தேன். எடிபன் நிறுவனத்துடன் ரூ.540 கோடி முதலீட்டுக்கான ஒப்பந்தம் மேற்கொண்டது மகிழ்ச்சிக்குரியது.

நோய்த்தடுப்பு சிகிச்சையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளில் ஈடுபட்டுள்ள Mabtree என்ற நிறுவனத்துடன் பயனுள்ள கலந்துரையாடலையும் மேற்கொண்டேன். இது ஸ்பெயின் நாட்டின் வெற்றிகரமான பயணத்தின் இறுதிக்கட்டம் ஆகும். இதுபோன்ற பலனளிக்கும் முடிவுகளுடன், நான் நாளை (இன்று–பிப்.7) ஸ்பெயினிலிருந்து புறப்படுகிறேன். சில நாட்களுக்குப் பிறகு உங்கள் அனைவரையும் பார்க்க ஆவலுடன் இருக்கிறேன். இது எனக்கு அளவில்லா மகிழ்ச்சியை அளிக்கிறது. அதேபோன்று, ஸ்பெயினில் உள்ள தமிழ் சமூகம் எனக்குக் காட்டிய அன்பான வரவேற்பு மற்றும் விருந்தோம்பலுக்கும் நன்றியுள்ளவனாவேன்” எனத் தெரிவித்துள்ளார்.

# ஒரே நாளில் 20 மாவட்டங்களில் 1,021 டாக்டர்கள் பணி நியமனம் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்

சென்னை : பிப். 7–

தமிழகத்தில் மருத்துவத் துறையில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்புவதற்காக தேர்வுத் துறை மூலம் 1,021 புதிய டாக்டர்கள் தேர்வு தேர்வு செய்யப்பட்டனர்.



தேர்வு செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் 20 மாவட்டங்களில் உள்ள அரசு ஆஸ்பத்திரிகளில் நியமிக்கப்பட்டுள்ளார்கள். புதிய டாக்டர்களுக்கு பணி ஆணை வழங்கும் நிகழ்ச்சி டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழக கூட்ட அரங்கில் நேற்று நடந்தது.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் டாக்டர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, துணை வேந்தர் டாக்டர் நாராயணசாமி, பொது சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர் செல்வ விநாயகம், டாக்டர் சங்கு மணி உள்பட பலர் கலந்து கொண்டார்.

மாவட்ட வாரியாக நியமிக்கப்பட்டுள்ள புதிய டாக்டர்கள் எண்ணிக்கை வருமாறு:- அறந்தாங்கி-62, அரிய லூர்-45, செய்யாறு-41, திண்டுக்கல்-44, கோவில்பட்டி-44, மயிலாடுதுறை-47, நாகப்பட்டி னம்-41, பரமக்குடி-60, புதுக்கோட்டை-64, ராமநாதபுரம்-48, சிவகங்கை-84, சிவகாசி-50, தென்காசி-52, தஞ்சாவூர்-70, நீலகிரி-55, தூத்துக்குடி-38, நெல்லை-53, திருவண்ணா மலை-71, திருவாரூர்-106, விருதுநகர்-43.

# “எங்கள் இந்துத்துவா அனைவரையும் ஏற்கக்கூடியது” – உத்தவ் தாக்கரே பேச்சு

ரத்னகிரி (மகாராஷ்டிரா) : பிப். 7–



இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட மதச் சிறுபான்மையினரையும் ஏற்கக்கூடியது எங்கள் இந்துத்துவா என்று சிவ சேனா (யுபிடி) கட்சியின் தலைவர் உத்தவ் தாக்கரே தெரிவித்துள்ளார்.

ரத்னகிரி மாவட்டம், ராஜபூர், சிப்லுன் நகரங்களில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உத்தவ் தாக்கரே நேற்று முன்தினம் திங்கள்கிழமை உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: இந்த பொதுக்கூட்டத்துக்கு காவிநிற தொப்பி அணிந்தவர்கள் மட்டுமல்ல இஸ்லாமியர்களும் வந்திருப்பதைப் பார்க்கிறேன். இங்கே சத்ரபதி சிவாஜியின் சிலையும் இருக்கிறது, இஸ்லாமியர்கள் வழிபடக்கூடிய தர்காவும் இருக்கிறது. சமீபத்தில் நான் ராய்காட் வந்தபோது, இஸ்லாமிய சமூகத்தவர்கள் எனக்கு மராத்தியில் மொழிபெயர்க்கப்பட்ட குரானை பரிசாக அளித்தார்கள். எங்கள் இந்துத்துவா எது என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

நான் மீண்டும் சொல்கிறேன். எங்கள் இந்துத்துவா மதங்களுக்கு இடையே முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடியதோ, சமூகங்களுக்கு இடையே உள்ள உறவில் தீயைப் பற்ற வைப்பதோ அல்ல. இது அனைவரையும் உள்ளடக்கியது. எனக்குப் பின்னால் இந்து சமூகம் நின்றதைப் போல, தற்போது இஸ்லாமிய, கிறிஸ்தவ சமூகங்களும் என்னோடு இணைந்துள்ளார்கள். நாட்டை சூழ்ந்திருக்கும் சர்வாதிகார ஆபத்தில் இருந்து காக்க, சாதி, மதத்தை விட்டுவிட்டு நாம் அனைவரும் நாட்டுப்பற்றோடு ஒன்றிணைய வேண்டும் என கோரிக்கை விடுக்கிறேன். நாட்டுக்காக போராடி மடிந்த அனைவருக்கும் ஆதரவாக நிற்கக்கூடியதே எங்கள் கட்சியின் இந்துத்துவா.

எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிராக மத்திய அரசு அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, சிபிஐ போன்ற அமைப்புகளைப் பயன்படுத்தி அச்சுறுத்தப் பார்க்கிறது. மூன்று முறை சட்டப்பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எங்கள் கட்சியின் ராஜன் சால்வி மற்றும் தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் ரவீந்திர வைக்கர் ஆகியோருக்கு எதிராக அமலாக்கத்துறை சோதனை நடத்தி இருக்கிறது. மத்திய விசாரணை அமைப்புகளின் அழுத்தத்துக்கு அவர்கள் அடிபணியவில்லை. அவர்கள் தங்கள் விசுவாசத்தை மாற்றிக்கொள்ளவில்லை. சோதனையான நேரங்களில்தான் ஒருவரின் உண்மையான தன்மையை அறிந்து கொள்ள முடியும். அந்த வகையில், இவர்கள் இருவரும் சிவ சேனா (யுபிடி) மீதான தங்கள் பற்றில் உறுதியாக இருப்பதை நிரூபித்திருக்கிறார்கள் என்று உத்தவ் தாக்கரே அவர் பேசினார்.

# உத்தராகண்ட் சட்டப்பேரவையில் பொது சிவில் சட்ட மசோதா தாக்கல்

டேராடூன் : பிப். 7–



உத்தராகாண்ட் சட்டப்பேரவையில் பொது சிவில் சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அப்போது, ஆளும் கட்சி எம்எல்ஏக்கள் மேசைகளைத் தட்டி ‘ஜெய் ஸ்ரீ ராம்’ என்றும் ‘வந்தே மாதரம்’ என்றும் கோஷங்களை எழுப்பி தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

நாடு முழுவதும் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. இதற்கான பணிகளை சட்ட ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், சுதந்திர இந்தியாவில் முதல் மாநிலமாக உத்தரகாண்ட் தனது சட்டப்பேரவையில் பொது சிவில் சட்டத்தை தாக்கல் செய்துள்ளது. இதை கருத்தில் கொண்டு நேற்று காலை சட்டப்பேரவைக்கு வருகை தந்த முதல்வர் புஷ்கர் சிங் தாமி, இந்திய அரசியல் சாசனத்தின் ஒரு பிரதியை கைகளில் ஏந்தியவாறு வந்தார்.

இதையடுத்து, சட்டப்பேரவையில் பொது சிவில் சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட்டது. அப்போது, ஆளும் கட்சி எம்எல்ஏக்கள் மேசைகளைத் தட்டி ‘ஜெய் ஸ்ரீ ராம்’ என்றும் ‘வந்தே மாதரம்’ என்றும் கோஷங்களை எழுப்பி தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர். இந்த மசோதா குறித்து விவாதிக்கப்பட்டு பின்னர் நிறைவேற்றப்படும் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே கோவாவில் பொது சிவில் சட்டம் நடைமுறையில் உள்ளது. அங்கு போர்ச்சுக்கீசியர்களின் ஆட்சிக் காலத்தில் தொடங்கிய பொது சிவில் சட்ட நடைமுறை தொடர்ந்து அமலில் உள்ளது. சுதந்திரத்துக்குப் பிறகு முதல்முறையாக உத்தரகாண்ட்டில் பொது சிவில் சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மசோதா குறித்து ஆய்வு செய்ய போதுமான கால அவகாசம் கொடுக்காமல் நிறைவேற்ற அரசு திட்டமிடுவதாகவும், இது சட்ட நடைமுறைக்கு எதிரானது என்றும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் யஷ்பால் ஆர்யா குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதை அடுத்து குறுக்கிட்டுப் பேசிய சபாநாயகர் ரிது கந்தூரி, இந்த மசோதா குறித்து ஆய்வு செய்ய போதுமான கால அவகாசம் வழங்கப்படும் என்றும், அதன் பிறகே மசோதா வாக்கெடுப்புக்கு விடப்படும் என்றும் உறுதி அளித்தார். இதையடுத்து, எதிர்க்கட்சி எம்எல்ஏக்கள் சமாதானம் அடைந்தனர்.

முன்னதாக, கடந்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது, தாங்கள் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தால் பொது சிவில் சட்டத்தை நிறைவேற்றுவோம் என்று பாஜக வாக்குறுதி அளித்தது. இதனையடுத்து, தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்த பாஜக, பொது சிவில் சட்ட மசோதாவை தயாரிக்க உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழு 800 பக்கங்கள் கொண்ட தனது அறிக்கையை கடந்த வெள்ளிக்கிழமை முதல்வர் புஷ்கர்சிங்தாமியிடம் வழங்கியது. இதனைத் தொடர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், இந்த மசோதாவுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

# ஆந்திராவில் செம்மரக்கடத்தலை தடுக்க முயன்ற காவலர் கார் ஏற்றி கொலை

அமராவதி : பிப். 7–



ஆந்திராவில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்த செம்மர கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் கார் ஏற்றி கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பதி செம்மரக்கடத்தல் தடுப்பு அதிரடிப்படை போலீசார் வழக்கம்போல் நேற்று இரவு ரோந்து சென்றனர். அன்னமய மாவட்டம் கே.வி.பள்ளி மண்டலம் குன்றேவாரி பள்ளி சந்திப்பு அருகே வேகமாக வந்த காரை தடுத்து நிறுத்த போலீசார் முயன்றனர்.

ஆனால் அந்த கார் நிற்காமல் போலீஸார் மீது ஏறிச் சென்றது. இதில் சிறப்பு அதிரடிப்படை காவலர் பி.கணேஷ் (30) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதனால் காவலர் மீது காரை ஏற்றிய கடத்தல்காரர்கள் தப்பி ஓட முயன்றனர். ஆனால், காவல் துறையினர் விடாமல் அவர்களைத் துரத்தினர்.

அப்போது 3 பேர் தப்பியோடிய நிலையில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பிடிபட்ட காரில் இருந்து 7 செம்மரக் கட்டைகளை பறிமுதல் செய்தனர். மேலும் தப்பி ஓடிய மூன்று பேரை காவல் துறையினர் தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அன்னமய்யா மாவட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அமலாக்க துறை அதிகாரியின் ஜாமீன் மனு 2–வது முறையாக தள்ளுபடி : திண்டுக்கல் நீதிமன்றம் உத்தரவு

திண்டுக்கல் : பிப். 7–



திண்டுக்கல் அரசு மருத்துவரிடம் லஞ்சம் பெற்ற வழக்கில் அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரியின் ஜாமீன் மனுவை இரண்டாவது முறையாக நீதிபதி மோகனா தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

திண்டுக்கல் அரசு மருத்துவர் சுரேஷ்பாபுவிடம் லஞ்சம் பெற்ற வழக்கில் அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரி கைது செய்யப்பட்டு மதுரை சிறையில் உள்ளார். இவர் ஜாமீன் கோரி இரண்டாவது முறையாக திண்டுக்கல் தலைமை குற்றவியல் நடுவர் மன்ற நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். நீதிபதி மோகனா முன்னிலையில் இந்த மனு நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. லஞ்ச ஒழிப்புத் துறை தரப்பில் அரசு வழக்கறிஞர் அனுராதா, அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரிக்கு ஜாமீன் வழங்க எதிர்ப்புத் தெரிவித்தார்.

அமலாக்கத் துறை அதிகாரியின் வழக்கறிஞர் செல்வம், ஜாமீன் தர உத்தரவிடலாம் என முந்தைய நீதிமன்ற உத்தரவுகளை மேற்கோள்காட்டி வாதாடினார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி மோகனா, அங்கித் திவாரிக்கு ஜாமீன் வழங்குவது குறித்து நேற்று உத்தரவிடுவதாக தெரிவித்து வழக்கை தள்ளிவைத்திருந்தார்.

இந்நிலையில், நேற்று காலை அங்கித் திவாரியின் ஜாமீன் மனு நீதிபதி மோகனா முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, அங்கித் திவாரியின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# ‘நாய்க்கும் ஆதரவாளருக்கும் ஒரே பிஸ்கெட்’ ராகுல் காந்தி மீது அசாம் முதல்வர் புதிய தாக்கு

புதுடெல்லி : பிப். 7–



இந்திய ஒற்றுமை நீதி யாத்திரையின் போது காங்கிரஸ் எம்.பி., ராகுல் காந்தி வளர்ப்பு நாய் ஒன்றுக்கு பிஸ்கெட் வழங்கும் வீடியோ வைரலாகி வரும் நிலையில், அது குறித்து அசாம் முதல்வர் ஹேமந்த பிஸ்வா சர்மா ராகுல் மீது புதிய தாக்குதல் ஒன்றை தொடுத்துள்ளார்.

ஜார்க்கண்ட்டில் நடந்த இந்திய ஒற்றுமை நீதி யாத்திரையின் போது எடுக்கப்பட்ட வீடியோ ஒன்று தற்போது சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது. வீடியோவில் ராகுல் காந்தி வளர்ப்பு நாய் ஒன்றுடன் உள்ளார். அதற்கு கொடுப்பதற்காக அருகில் இருக்கும் உதவியாளரிடம் பிஸ்கெட் பாக்கெட் ஒன்றை கேட்கிறார். தொடர்ந்து நாய்க்கு பிஸ்கெட் ஊட்டுகிறார். அப்போது காங்கிரஸ் ஆதரவாளர்கள் ராகுல் காந்தியுடன் பேச வருகின்றனர். நாய்க்கு பிஸ்கெட் ஊட்டிக் கொண்டே ராகுல் அவர்களுடன் பேசுகிறார். அப்போது நாய்க்கு வழங்கிய பிஸ்கெட் ஒன்றை அது சாப்பிட மறுக்க, உடனடியாக ராகுல் காந்தி அதனை தன்னிடம் பேசிய ஆதரவாளருக்கு வழங்குகிறார். இந்திய ஒற்றுமை நீதி யாத்திரையின் அதிகாரபூர்வ எக்ஸ் பக்கத்தில் இது தொடர்பான வீடியோ வெளியிடப் பட்டிருந்தாலும், அதல் நாய்க்கு பிஸ்கெட் வழங்கும் காட்சிகள் இல்லை.

ராகுல் காந்தியின் இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அத்துடன் காங்கிரஸ் எம்.பி. கட்சியினர் மற்றும் ஆதரவாளர்களை தவறாக நடத்துவதாக ராகுல் மீது பலர் குற்றம்சாட்டியுள்ளனர். என்றாலும் சிலர் அந்த நாய் ராகுலிடம் பேசிய ஆதரவாளருடையது, கொஞ்சம் நேரம் கழித்து நாய்க்கு கொடுப்பதற்காக பிஸ்கெட்டை அந்த ஆதரவாளரிடம் ராகுல் காந்தி கொடுத்தார் என்றும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இன்னும் சிலர் அந்த வீடியோ குறித்த தங்களின் பதிவில் அசாம் முதல்வர் ஹேமந்த பிஸ்வா சர்மாவை டேக் செய்துள்ளனர்.

முன்பு காங்கிரஸில் இருந்த அவர் பின்னர் அக்கட்சியில் இருந்து விலகி பாஜகவில் இணைந்தார். ஹேமந்த பிஸ்வா, தானும் பிற காங்கிரஸ் தலைவர்களும் நடத்தப்பட்ட விதம் குறித்து ஒரு சம்பவத்தை அடிக்கடி கூறி வந்தார். அவர் கூறுகையில், “நானும் சில காங்கிரஸ் தலைவர்களும் ராகுல் காந்தியைச் சந்திக்கச் சென்றோம். அப்போது ராகுல் காந்தியின் வளர்ப்பு நாய் ஒரு தட்டிலுள்ள பிஸ்கெட்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தது. காங்கிரஸ் தலைவர்களுக்கும் அந்தத் தட்டில் இருந்தே பிஸ்கெட்கள் சாப்பிட வழங்கப்பட்டன” என்றார். இதனை அவர் பல பேட்டிகளில் தெரிவித்துள்ளார். அப்போது அவர், கட்சியின் முக்கிய பிரச்சினைகளில் ராகுல் காந்தி அக்கறை காட்டவில்லை என்று குற்றம்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில் தற்போது வைரலாகி வரும் வீடியோ குறித்து கருத்து தெரிவித்துள்ள அசாம் முதல்வர், ராகுலைத் தாக்கும் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள தவறவில்லை. எக்ஸ் பயனர் ஒருவரின் பதிவுக்கு பதில் அளித்துள்ள ஹேமந்த பிஸ்வா, “ராகுல் காந்தி மட்டும் இல்லை, மொத்த குடும்பத்தினராலும் என்னை அந்த பிஸ்கெட்டைச் சாப்பிட வைக்க முடியவில்லை. நான் ஒரு பெருமை மிக்க அசாமி, இந்தியன். நான் அந்த பிஸ்கெட்டைச் சாப்பிட மறுத்தேன், காங்கிரஸில் இருந்து வெளியேறினேன்" என்று தெரிவித்துள்ளார்.

பாஜகவின் அமித் மாளவியாவும் இந்த வீடியோ குறித்து ராகுல் காந்தியை தாக்கியுள்ளார். அவர், “கட்சியின் இளவரசர் கட்சியினரை நாய் போல நடத்தினால் கட்சி விரைவில் அழிந்து போவது இயற்கையே” என்று தெரிவித்துள்ளார்.

# மோட்டார் வாகன சட்டத்திருத்தை திரும்பப்பெறக் கோரி சிஐடியு ஆர்ப்பாட்டம்

புதுக்கோட்டை : பிப். 7–



மத்திய அரசின் மோட்டார் வாகன சட்டத் திருத்தச் சட்டத்தை எதிர்த்தும், அச்சட்டத்தை திரும்பப்பெறக் கோரியும் புதுக்கோட்டையில் சிஐடியு தொழிற்சங்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மத்திய அரசு கொண்டுவந்துள்ள மோட்டார் வகன திருத்தச் சட்டத்தினால் அதீதமான தண்டனைகள், ஆன்லை அபராதம், வாகனவரி உயர்பு, இன்சூரன்ஸ் கட்டண உயர்வு என மோட்டார் தொழிலில் உள்ளவர்கள் கடுமையான பாதிப்பைச் சந்தித்துவருகின்றனர். எனவே, மோட்டார் வாகன திருத்தச் சட்டத்தைக் கண்டித்தும், சட்டத்தை திரும்பப்பெறக் கோரியும், அதீதத் தண்டனைகள், அபராதம், கட்டண உயர்வுகளைத் திரும்பப்பெறக் கோரியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்துப் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கத்தின் (சிஐடியு) மாவட்டப் பொதுச் செயலாளர் க.ரெத்தினவேல் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து சிஐடியு மாவட்டத் தலைவர் க.முகமதலிஜின்னா பேசினார். மாநில செயலாளர் ஏ.ஸ்ரீதர் நிறைவுரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான தொழிலாளர் பங்கேற்றனர்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# இந்திய ஹாக்கி அணி வீரர் வருண் குமார் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு





**ஹிமாச்சல் : பிப். 7,**

**ஹிமாச்சல்பிரதேசத்தை சேர்ந்த இந்திய ஹாக்கி அணி வீரர் வருண் குமார் மீது, போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.**

இளம்பெண் அளித்த புகாரின் பேரில் பெங்களூரு ஞானபாரதி காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்ஸ்டாகிராம் மூலம் பழகிய 17 வயது பெண்ணை, காதலிப்பதாக கூறி பலமுறை பாலியல் வன்கொடுமை செய்ததாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 வருடங்களாக பழகி வந்த நிலையில், திருமணம் செய்யமால் மோசடி செய்ததாக இளம்பெண் புகார் தெரிவித்துள்ளார். 2022 ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற அணியில் வருண் குமார் இடம்பெற்றிருந்தார். 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய அணியிலும் வருண் குமார் இடம்பெற்றிருந்தார். வருண் குமார் 2021ம் ஆண்டில் அர்ஜுனா விருதுபெற்றுள்ளார். வருண்குமார் மீது போக்சோ, மோசடி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. வருணை கைது செய்ய பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் இடத்திற்கு பெங்களூரு போலீசார் விரைந்துள்ளனர்.

இந்தியஹாக்கிஅணியின் வீரராக பார்க்கப்படுபவர் வருண்குமார், அவருக்கு அர்ஜுனா விருது கிடைத்துள்ளது. முதல் முறையாக தனது ஆட்டத்தை 2017ல் இந்திய அணிக்காக தொடங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏசியன் கேம்ஸ் உள்ளிட்ட போட்டிகளில் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பரிசுகளை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இவர் மீது பெங்களூரு காவல் நிலையத்தில் போக்சோ, மோசடி ஆகிய புகாரை அளித்துள்ளார்.

புகாரில் தன்னை இன்ஸ்டாகிராம்மூலம்சந்தித்த வருண்குமார் தன்னுடன்பழகி வந்ததாகவும், அந்தசமயத்தில் பலமுறை தன்னுடன் உடல் உறவு கொண்டதாகவும் புகார் அளித்துள்ளார். முதல் முறையாக 2019ம் ஆண்டு இன்ஸ்டாகிராம் மூலம் தன்னை அறிமுகம் செய்து பெங்களூருவில் பயிற்சிக்கு வந்ததாகவும் அப்பொழுதுமுதல்தன்னுடன் பழகியதாகவும், திருமணம் செய்துகொள்வதாக கூறி பலமுறை தன்னுடன் பாலியல், உடல் உறவு கொண்டதாகவும் அந்த பெண் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் தற்போது திருமணம் செய்து கொள்கிறேன் என்று கூறி நிலையில் தற்போது புறக்கணித்து வருவதாக அந்த புகாரில் தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து பெங்களூரு போலீசார் இந்திய ஹாக்கி அணி வீரர் வருண்குமார் மீது போக்சோ மற்றும் மோசடி வழக்கு செய்து அவரை கைது செய்வதற்காக தற்போது அவருடைய வீட்டிற்கு விரைந்துள்ளனர்.

# கிரிக்கெட்டில் தொழில் நுட்பம் புகுத்தப்பட்டு டிஆர்எஸ் தீர்ப்புகள்

## பென் ஸ்டோக்ஸ் சந்தேகம்



**விசாகப்பட்டணம் : பிப். 7,**

**கிரிக்கெட்டில் தொழில் நுட்பம் புகுத்தப்பட்டு எல்.பி.தீர்ப்புகள், மட்டையில் லேசாகப் படும் தீர்ப்புகள் பெரிய அளவில் சர்ச்சைகளை வர வர கிளப்பி வருகின்றன, தொழில் நுட்பக் கோளாறுகளைப் போதாமைகளை எந்த கேப்டனாவது சுட்டிக்காட்டினால் உடனே தோல்வியைக் கண்டு அழுகிறார், புலம்புகிறார் என்று நெட்டிசன்கள் முதல் விவரம் தெரிந்த வர்ணனையாளர்கள் வரை சமூக ஊடகங்களில் சாடக்கிளம்பி விடுகின்றனர்.**

உண்மையில் தோனி தொழில்நுட்பத்தை நம்ப மாட்டார், ஏனெனில் அவர் கூற வருவது என்னவெனில் தொழில் நுட்பம் துல்லியத்தைத் தருகிறது என்றால் 'அம்பயர்ஸ் கால்' என்ற ஒன்று இருக்க வேண்டிய அவசியமென்ன? அவுட்டா நாட் அவுட்டா அவ்வளவுதானே என்பார் தோனி. மிகச்சரியான தகர்ப்பு விமர்சனக் கேள்வியாகும் இது.

இப்போது பென் ஸ்டோக்ஸ் அதே கேள்வியை எழுப்பியுள்ளார். விசாகப்பட்டண டெஸ்ட் போட்டியில் ஜாக் கிராலிக்கு கொடுத்த அவுட் உண்மையில் அநியாயமான அவுட். எப்படி அதை அவுட் கொடுக்க முடியும் என்றே இப்போது வரை உண்மையான நடுவர்களுக்கே குழப்பமாக உள்ளது. பென் ஸ்டோக்ஸ் தோற்றதற்கு அதைக் காரணமாகக் கூறவில்லை. அப்படி அவர் கூறுவதைக் குறுக்கிப் புரிந்து கொண்டு அவரை நெட்டிசன்கள் ஒன்றும் தெரியாமல் சாடி வருகின்றனர். கிரிக்கெட்டை கிரிக்கெட்டாகப் பார்க்க வேண்டும். அதில் தொழில் நுட்பம் ஆற்றும் பங்கில் குறையிருந்தால், அது சுட்டிக்காட்டப்பட்டால் அதை ஏற்றுக் கொள்ளும் பரந்த மனப்பான்மை வேண்டும், இதே ரோஹித் சர்மா சொன்னால் ஆஹா, பிரமாதம் என்றும் எதிரணி கேப்டன் சொன்னால் அதை உடனே அழுகை என்றும் புலம்பல் என்றும் தோல்விக்கான சாக்கு என்றும் சாடுவது கும்பல் மனோபாவமே.

இங்கிலாந்து எல்லா பிட்ச்களுக்கும் ஒரே பாஸ்பால் அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது படுமோசமான சிந்தனை. உண்மையான பிட்சில் பாஸ்பால் கைக்கொடுக்கும் பந்து மேலேயும் கணுக்காலுக்குக் கீழேயும் மாறிமாறிசெல்லும்பிட்ச்களில் பொறுமையைத்தான் கடைப்பிடிக்க வேண்டும், கிராலி, பென் ஃபோக்ஸ், ஏன் அறிமுக வீரர் ஹார்ட்லி ஆடும் உத்தி கூட ஜோ ரூட்டிடமோ, ஆலி போப்பிடமோ, பேர்ஸ்டோவிடமோ இல்லை என்பதுதான் தோல்விக்குக் காரணம்.

பென் ஸ்டோக்ஸும் இதை ஒப்புக் கொண்ட நிலையில்தான் தொழில்நுட்பக் கோளாறுகளை விமர்சிக்கிறார்: "ஆட்டத்தில் தொழில்நுட்பம் இருக்கவே செய்யும். அது 100% முடிவுகளைத் துல்லியமாக கொடுக்காததன் காரணங்கள் அனைவரும் அறிந்ததே. அதனால்தான் அம்பயர்ஸ் கால் என்ற ஒன்று இருக்கிறது. 100% அது துல்லியமில்லை என்பதை ஒத்துக் கொள்ளும் ஒவ்வொருவரும் நான் தொழில்நுட்பத்தில் பிரச்சனை இருக்கிறது என்று கூறினால் அதையும் ஏற்கத்தான் வேண்டும். கிராலி விஷயத்தில் தொழில்நுட்பம் தவறானதே, அதுதான் என் கருத்து. அது என் சொந்தக் கருத்து.

ஆனால் பலதரப்பட்ட ஐயங்களும் நிர்ணயமின்மைகளும் உள்ள போட்டியில் நாங்கள் விரும்பியமுடிவுகிடைக்காதது தொழில் நுட்பத்தினால் என்று நான் ஒருபோதும் கூறப்போவதில்லை. கிராலி அவுட்டில் தொழில் நுட்பம் தவறான முடிவைக் காட்டியது என்று என் சொந்தக் கருத்தைச் சொல்ல எனக்கு தார்மிக உரிமை உண்டு. அதற்காகப் புகார் எழுப்பவெல்லாம் போவதில்லை. நடந்து முடிந்த ஒன்றை மேலும் கொண்டுசெல்வதில் என்ன பயன்? அந்தத் தீர்ப்பை மாற்றி அமைக்க முடியுமா என்ன? ஆகவே அந்த இடத்துடன் என் கருத்து முடிந்து விட்டது" என்றார் பென் ஸ்டோக்ஸ்.

ஜாக் கிராலி அட்டகாசமாக ஆடி வந்தார். அவர் இருந்திருந்தால் இலக்கை நோக்கி இங்கிலாந்து திட்டமிட்டு சென்றிருக்கும். 42வது ஓவரில் குல்தீப் யாதவ் பந்தில் கால்காப்பில் வாங்கினார். அதை கள நடுவர் மரைஸ் எராஸ்மஸ் நாட் அவுட் என்றார். ரோஹித் சர்மா ரிவியூ கேட்டார். பந்து கால்காப்பில் பட்டு ஸ்டம்பில் அடிக்குமாறு காட்டியது டி.ஆர்.எஸ். அவுட் தீர்ப்பு அளிக்கப்பட்டது. இது கடும் சந்தேகங்களை எழுப்பியது. ஏனெனில் பந்து பிட்ச் ஆன பகுதியும் கால்காப்பில் பட்ட பகுதியும் பந்து ஸ்டம்பை அடிக்குமாறு இருந்திருக்க வாய்ப்பில்லை, டி.ஆர்.எஸ். எப்படி அப்படிக் காட்டியது என்பதுதான் பென் ஸ்டோக்சின் சந்தேகம்.

# ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரில் தமிழகம் வெற்றி



போர்வோரிம் : பிப். 7,

ரஞ்சிகோப்பை கிரிக்கெட் தொடரில் 'சி' பிரிவில் இடம் பெற்றுள்ள தமிழக அணி, கோவாவுக்கு எதிரான ஆட்டத்தில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கோவாவில் உள்ள போர்வோரிம் பகுதியில் நடைபெற்று வந்த இந்த ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் கோவா 241 ரன்களும், தமிழகம் 273 ரன்களும் எடுத்தன. 32 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்ஸை விளையாடிய கோவா 65.5 ஓவர்களில் 168 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. தமிழக அணி தரப்பில் சாய் கிஷோர், அஜித்ராம் ஆகியோர் தலா 4 விக்கெட்களையும் பிரதோஷ் ரஞ்ஜன் பால் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். 137 ரன்கள் இலக்குடன் பேட் செய்த தமிழக அணி 3-வது நாள் ஆட்டத்தின் முடிவில் 26 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 61 ரன்கள் எடுத்தது. சுரேஷ் லோகேஷ்வர் 34, பிரதோஷ் ரஞ்ஜன் பால் 22 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று முன்தினம் திங்கள்கிழமை கடைசி நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய தமிழக அணி 49.5 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 142 ரன்கள் எடுத்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சுரேஷ் லோகேஷ்வர் 129 பந்துகளில், 6 பவுண்டரிகளுடன் 52 ரன்களும், பிரதோஷ்ரஞ்ஜன் பால் 125 பந்துகளில், 6 பவுண்டரிகளுடன் 65 ரன்களும் சேர்த்து ஆட்டமிழந்தனர். பாபா இந்திரஜித் 7, விஜய் சங்கர் 13 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

தமிழக அணிக்கு இது 3-வது வெற்றியாக அமைந்தது. 5 ஆட்டங்களில் விளையாடிய உள்ள தமிழகம் 3 வெற்றி, ஒரு தோல்வி, ஒரு டிராவுடன் தனது பிரிவில் 21 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

# யோகா போட்டியில் தென் தமிழக அளவிலான மாணவர்கள் அசத்தல்



**ராமநாதபுரம் : பிப். 7,**

**ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் ஆர்னவ் யோகா நிலையம் மற்றும் ராமநாதபுரம் மாவட்ட யோகா ஸ்போர்ட்ஸ் சாம்பியன்ஷிப் சார்பில் 81-ம் ஆண்டு தென் தமிழக அளவிலான யோகாசன சாம்பியன்ஷிப் போட்டியானது நடைபெற்றது. ஏழு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் 1400 மாணவர்கள் கலந்து கொண்டு யோகாசனங்களை செய்து அசத்தினர்.**

இந்த யோகாசனப் போட்டியில் ராமநாதபுரம், மதுரை, விருதுநகர், சிவகங்கை, தேனி, திண்டுக்கல் ஆகிய தென் மாவட்டங்களில் இருந்து 1400 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு ஐந்து வயது, பத்து வயது, பதினைந்து வயது என ஏழு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றது.

இதில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை நடராஜனம், சக்கராசனம், சிராசாசனம், யோக நித்திரை, என்கோணசாசனம், என பல்வேறு பிரிவுகளில் யோகாசனங்களை செய்து அசத்தினர். ஏழு பிரிவுகளிலும் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ், பதக்கங்கள் வழங்கினர். இந்த போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் தமிழ்நாடு அரசு நடத்தும் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்பார்கள் என தெரிவிக்கப்பட்டது.

# ஆப்கானிஸ்தானை 10 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது இலங்கை



**கொழும்பு : பிப். 7,**

**இலங்கை - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒரேயொரு போட்டி கொண்ட டெஸ்ட் தொடர் கொழும்பில் நடைபெற்றது. கடந்த 2-ந் தேதி தொடங்கிய இந்த போட்டியில் டாஸ் வென்ற இலங்கை அணி பீல்டிங் தேர்வு செய்தது.**

அதன்படி முதலில் பேட்டிங் செய்த ஆப்கானிஸ்தான் முதல் இன்னிங்சில் 198 ரன்னில் சுருண்டது. இலங்கை அணியின் விஷ்வா பெர்னாண்டோ 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். அசிதா பெர்னாண்டோ, பிரபாத் ஜெயசூர்யா ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர். பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை மேத்யூஸ் (141), தினேஷ் சண்டிமல் (107) ஆகியோரின் சதங்களால் 439 ரன்கள் குவித்து ஆல்அவுட் ஆனது.

241 ரன்கள் பின்தங்கிய நிலையில் ஆப்கானிஸ்தான் 2-வது இன்னிங்சை தொடங்கியது. தொடக்க வீரர் இம்ராஹிம் ஜட்ரன் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். அவர் 114 ரன்னில் ஆட்டமிழந்தார். ஆப்கானிஸ்தான் ஒரு கட்டத்தில் 241 ரன்கள் எடுத்த நிலையில் ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்திருந்தது. அதன்பின் தொடர்ச்சியாக விக்கெட்டுகளை இழக்க 296 ரன்னில் ஆல்அவுட் ஆனது. இதனால் 55 ரன்கள் மட்டுமே முன்னிலைப் பெற்றது. பிரபாத் ஜெயசூர்யா 5 விக்கெட்டுகள் சாய்த்தார்.

பின்னர் 56 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் களம் இறங்கிய இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி இலக்கை எட்டி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து 8 விக்கெட்டுகள் வீழ்த்தி பிரபாத் ஜெயசூர்யா ஆட்ட நாயகன் விருதை வென்றார்.

வரலாறு சினிமா

# "நம் நாட்டில் வெறுப்பு அதிகமாகிவிட்டது" விஷ்ணு விஷால் ஆதங்கம்



**சென்னை : பிப். 7,**

**"ஒருவருக்கு ஒருவர் கொள்கைகள் மாறலாம். கருத்துகள் மாறலாம். அதற்கு மரியாதை கொடுப்பது தானே மனிதம். பிடிக்கவில்லை என்பதால் அவர்களை தாழ்த்தி பேசக்கூடாது. நம் நாட்டில் இந்த வெறுப்பு அதிகமாக பரவி வருகிறது" என நடிகர் விஷ்ணு விஷால் பேசியுள்ளார்.**

ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கியுள்ள 'லால் சலாம்' படத்தின் ட்ரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசிய நடிகர் விஷ்ணு விஷால், "சில நாட்களுக்கு முன்பு 'பாரத் vs இந்தியா' விவகாரத்தின்போது இரண்டும் ஒன்று தானே, எதற்கு இந்த பெயர் மாற்றம் என யோசித்தேன். அதை நான் ட்வீட்டாக பதிவு செய்யும்போது அந்தப் பதிவு வைரலாகி, நிறைய கமெண்ட்ஸ்கள் வந்தன. நான் இதுவரை அரசியல் தொடர்பான எதையும் பதிவிட்டதில்லை. காரணம் எனக்கு அரசியல் பற்றி எதுவும் தெரியாது. இந்த விவகாரத்தில் ஓர் இந்திய குடிமகனாக எனக்கு என்ன தோன்றியதோ அதை பதிவு செய்தேன்.

எனக்கு தப்பாக தெரியவில்லை. ஆனால் அதற்கு வந்த எதிர்ப்பு மிகப்பெரியது. 2 நாட்களில் நான் 'ஆன்டி' இந்தியன் ஆகிவிட்டேன். 'ஆன்டி' இந்துவாகிவிட்டேன். நிறைய 'ஆன்டி'யாகிவிட்டேன். 'ப்ரோ' ஆகிவிட்டேன். என் மனைவி வெளிநாட்டவர் என்பதால் நான் இந்த ஊரைச்சேர்ந்தவனில்லை என ஆகிவிட்டேன். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இத்தனை வெறுப்பு, ஏன் நாம் எல்லோரும் இப்படி இருக்கிறோம், ஒருத்தருக்கு ஒருத்தர் கொள்கைகள் மாறலாம், கருத்துகள் மாறலாம், அதற்கு மரியாதை கொடுப்பது தானே மனிதம். பிடிக்கவில்லை என்பதால் அவர்களை தாழ்த்தி பேசக்கூடாது. நம் நாட்டில் இந்த வெறுப்பு அதிகமாக பரவி வருகிறது. குறிப்பாக, சமூக வலைதளங்களில் அதிகமாக இருக்கிறது. இந்தப் படம் வெறுப்பு இருக்ககூடாது என்பதைத்தான் பேசுகிறது. ஒரு மதத்துக்கு மற்ற மதத்தினர் மரியாதை கொடுக்கவேண்டும். இந்தப் படம் அதனைச் சொல்லிக்கொடுக்கும்" என்றார்.

# வாழ்த்து தெரிவிக்க வந்த சிவராஜ்குமாருக்கு விருந்து வைத்த சிரஞ்சீவி



**ஐதராபாத் : பிப். 7,**

**தனது வீட்டில் சிவராஜ்குமாருக்கு தடபுடல் விருந்து கொடுத்து அசத்தினார் சிரஞ்சீவி.**

தெலுங்கு சினிமாவின் சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவி. அதேபோல் கன்னட சினிமாவின் சூப்பர் ஸ்டார் சிவராஜ்குமார். சிரஞ்சீவிக்கு மத்திய அரசு, பத்மவிபூஷண் விருதை அறிவித்துள்ளது. இதற்காக அவருக்கு திரையுலகை சேர்ந்த பலரும் டிவிட்டரில் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள். ஆனால் சிவராஜ்குமாரோ, ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்துக்கே அவரை வாழ்த்த வந்துவிட்டார். நேற்று முன்தினம் திங்கள்கிழமை திடீரென சிரஞ்சீவியின் வீட்டுக்கு வந்தார் சிவராஜ்குமார். அவரை பார்த்ததும் நெகிழ்ந்துபோன சிரஞ்சீவி, அவரை ஆரத்தழுவி வரவேற்றார்.

இருவரும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். பின்னர், சிரஞ்சீவி வீட்டில் தயாரான தடபுடல் விருந்து சிவராஜ்குமாருக்காக பரிமாறப்பட்டது. சிரஞ்சீவியும் சிவராஜ்குமாரும் சேர்ந்து அந்த அறுசுவை உணவுகளை ருசித்து சாப்பிட்டனர். இந்த புகைப்படங்கள்தான் சமூக வலைத்தளங்கள் அனைத்திலும் டிரெண்டிங் ஆகி, வைரல் ஆனது. இரு சூப்பர் ஸ்டார்களின் ரசிகர்களும் 'இதுதான் ஸ்டார் விருந்து' என்றும், 'விருந்தோம்பலை மதிக்கும் சிரஞ்சீவி' என்றும் 'சிவண்ணாவின் பெருந்தன்மை' என்றும் ஷேக்டேக்குகளை டிவிட்டரில் டிரெண்ட் ஆக்கினார்கள்.

# "மதத்தையும் நம்பிக்கையையும் மனசுல வை" ஐஸ்வர்யா ரஜினிகாந்தின் 'லால் சலாம்' ட்ரெய்லர்




**சென்னை : பிப். 7,**

**ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கியுள்ள 'லால் சலாம்' படத்தின் ட்ரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது.**

நடிகர் ரஜினிகாந்தின் மூத்த மகள் ஐஸ்வர்யா இயக்கியுள்ள படம், 'லால் சலாம்'. இந்தப் படத்தில் 'மொய்தீன் பாய்' என்ற கதாபாத்திரத்தில் ரஜினிகாந்த் கவுரவ வேடத்தில் நடித்துள்ளார். விக்ராந்த், விஷ்ணு விஷால் இருவரும் பிரதான கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார். லைகா சார்பில் சுபாஷ்கரன் படத்தை தயாரித்துள்ளார். ரெட் ஜெயன்ட் நிறுவனம் தமிழகத்தில் படத்தை வெளியிடுகிறது. இந்நிலையில் இப்படத்தின் ட்ரெய்லர் தற்போது வெளியாகியுள்ளது.

ஊரில் நடக்கும் தேர் திருவிழாவில் பிரச்சினை நடக்கிறது. அதையொட்டி கிரிக்கெட் போட்டிகளும் காட்டபடுகின்றன. 'கூட்டம் சேர்க்குறவன விட, யார் பின்னாடி கூட்டம் சேருதோ அவன் ரொம்ப ஆபத்தானவன்' வசனத்துக்குப் பிறகான மொய்தீன் பாயாக ரஜினியின் என்ட்ரி மாஸுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. உள்ளூரில் நடைபெற்று வரும் கதை ஒரு கட்டத்தில் பம்பாயை நோக்கி நகர்வதாக தெரிகிறது. இந்த இரண்டுக்குமான கனெக்ஷன், கதையில் ரஜினியின் பங்கு, கிரிக்கெட்டுக்கான முக்கியத்துவம் இவையெல்லாம் எந்த புள்ளியில் ஒன்றிணையும் என பல கேள்விகளை எழுப்புகிறது ட்ரெய்லர்.

செந்திலின் கதாபாத்திரம் படத்தில் முக்கிய பங்கு வகிக்கும் என்பதை காட்சிகள் உறுதி செய்கின்றன. 'எந்த ஊர் சாமியா இருந்தாலும், யார் கும்புட்ற சாமியா இருந்தாலும், சாமி சாமிதான்', என்ற வசனமும் இறுதியில் ரஜினி பேசும், 'மதத்தையும், நம்பிக்கையையும் மனசுல வை, மனித நேயத்த அதுக்கு மேல வை. அதான் இந்த நாட்டோட அடையாளம்' வசனமும் ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் எழுதப்பட்டுள்ளது. 'பம்பாய்ல பாய் ஆளே வேறடா' என சொல்லும்போது மீண்டும் 'பாட்ஷா'வுக்குப்பிறகு பம்பாயில் ரஜினி அடையாளம் கவனிக்க வைக்கிறது. விக்ராந்த் கதாபாத்திரத்துக்கான காட்சிகள் பெரிய அளவில் தென்படவில்லை. படம் 9-ம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.

# விஜயகாந்த் உருவ படத்திற்கு மரியாதை செலுத்திய நடிகை ரம்பா



**சென்னை : பிப். 7,**

**நடிகை ரம்பா, விஜயகாந்த் இல்லத்தில் அவரது உருவ படத்திற்கு மரியாதை செலுத்தினார்.**

தமிழ் சினிமாவிலும் அரசியலிலும் தனக்கென தனி இடத்தைபிடித்தவர் விஜயகாந்த். கடந்த சில வருடங்களாக உடல் நலக்குறைவினால் பாதிக்கப்பட்டிருந்த விஜயகாந்த் கடந்த டிசம்பர் 28-ந் தேதி உடல் நலக்குறைவினால் காலமானார்.

இவரது உடல் தே.மு.தி.க. அலுவலகத்தில் டிசம்பர் 29-ந் தேதி 72 குண்டுகள் முழங்க முழு அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்று முதல் பல பிரபலங்கள், தொண்டர்கள், ரசிகர்கள், பொதுமக்கள் என பலர் தினந்தோறும் அங்கு சென்று அஞ்சலி செலுத்திவருகின்றனர். இந்நிலையில், நடிகை ரம்பா, விஜயகாந்த் இல்லத்தில் அவரது உருவ படத்திற்கு மரியாதை செலுத்தினார்.

# சிலியில் ஏற்பட்ட காட்டுத்தீயில் பலி எண்ணிக்கை 122 ஆக உயர்வு : நூற்றுக்கணக்கானோர் மாயம்



**சாண்டியாகோ : பிப். 7,**

**வேகமாக பரவி வரும் தீயை அணைப்பது சவாலாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தென் அமெரிக்க நாடான சிலியின் வினாடெல்மார் மலைப்பகுதியில் பயங்கர காட்டுத்தீ ஏற்பட்டது. இந்த தீ மளமளவென மற்ற பகுதிகளுக்கும் வேகமாக பரவி வருகிறது. இதனையடுத்து தீயணைப்பு வீரர்கள் அங்கு விரைந்தனர். அவர்கள் ஹெலிகாப்டர்கள் மூலம் தண்ணீரை தெளித்து தீயை கட்டுப்படுத்த முயன்று வருகின்றனர்.

ஆனாலும் தீ கட்டுக்கடங்காமல் எரிந்து வருகிறது. இந்த காட்டுத்தீயால் இதுவரை சுமார் 20 ஆயிரம் எக்டேர் வனப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் அங்குள்ள அரிய வகை தாவரங்கள், விலங்கினங்கள் தீயில் கருகி மடிந்தன. அதனை சுற்றியுள்ள எஸ்ட்ரெல்லா, நவிடாப் ஆகிய பகுதிகளுக்கும் இந்த தீ பரவியது. இதில் அங்குள்ள 3 ஆயிரம் வீடுகள் எரிந்து நாசமாகின.

இந்த நிலையில் சிலியில் எரியும் காட்டுத் தீயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 122 ஆக உயர்ந்துள்ளது. நூற்றுக்கணக்கானோர் மாயமாகி உள்ளனர். வேகமாக பரவி வரும் இந்த தீயை அணைப்பது சவாலாக உள்ளது என்றும் பல உடல்கள் மோசமான நிலையில் இருப்பதாகவும், அடையாளம் காண்பது கடினம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தடயவியல் ஊழியர்கள் காணாமல் போன உறவினர்களைப் புகாரளித்த நபர்களிடமிருந்து மரபணுப் பொருட்களின் மாதிரிகளை எடுப்பார்கள் என்று கூறப்படுகிறது.

தீயை அணைக்கும் பணியில் மீட்புபடையினருக்கு உதவும்படி பொதுமக்களை அந்நாட்டு அதிபர் கேப்ரியல் போரிக் கேட்டுக்கொண்டார். வனப்பகுதியில் ஏற்பட்டுள்ள தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்புப்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த காட்டுத்தீ காரணமாக இனிவரும் நாட்களில் வெப்பநிலை 104 டிகிரி வரை அதிகரிக்கும் என வானிலை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்லஸுக்கு புற்றுநோய் பாதிப்பு

## பக்கிங்ஹாம் அரண்மனை பரபரப்பு அறிக்கை



**லண்டன் : பிப். 7,**

**இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்லஸ், புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அறிக்கை மூலம் பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.**

75 வயதான மன்னர் சார்லஸ் கடந்த 2023-ம் ஆண்டு மன்னராக முடிசூடிக் கொண்டார். அவரது தாயார் இரண்டாம் எலிசபெத் ராணி, 2022-ல் உயிரிழந்ததை அடுத்து மன்னராக பொறுப்பேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இளவரசர்கள் வில்லியம் மற்றும் ஹாரியின் தந்தை. அண்மையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தார். இந்த சூழலில் அவருக்கு புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

"நோய் கண்டறிதல் சோதனையின் மூலம் மன்னர் மூன்றாம் சார்லஸுக்கு புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து அவருக்கு அதற்கான மருத்துவசிகிச்சை தொடங்கப்பட்டுள்ளது. பொதுவெளியில் நடைபெறும் நிகழ்வுகளில் அவர் பங்கேற்க வேண்டாம் என மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர். அதே நேரத்தில் தனது வழக்கமான மற்ற பணிகளை மன்னர் மேற்கொள்வார். சிகிச்சை முறையில் பாசிட்டிவ் மனநிலையில் உள்ள மன்னர், விரைந்து பொது வாழ்வுக்கு திரும்புவார்.

ஊகங்களைத் தடுக்கவும், தான் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதை உலகெங்கிலும் உள்ள அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையில் அறிவித்துள்ளார்" என பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

# ஜாம்பியாவில் காலரா பாதிப்பு : 3.5 டன் மருந்து பொருட்களை அனுப்பியது இந்தியா



**ஜாம்பியா : பிப். 7,**

**காலரா நோய்த்தொற்றால் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் ஜாம்பியாவிற்கு உதவும் வகையில், மருந்துகள் உள்பட சுமார் 3.5 டன் மனிதாபிமான உதவிபொருட்களை இந்தியா நேற்று விமானம் மூலம் அனுப்பியது.**

ஜாம்பியா நாட்டில் தற்போது திடீரென காலரா நோய்த்தொற்று ஏற்பட்டு உள்ளது. இதனால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இந்நிலையில் அந்த நாட்டுக்கு உதவ இந்தியா முன்வந்தது. இதைத்தொடர்ந்து சரக்கு விமானம் மூலம் மருந்து உதவிப் பொருட்களை நேற்று அனுப்பி வைத்துள்ளது.

இதுகுறித்து இந்திய அதிகாரி ஒருவர் கூறியதாவது:- காலரா நோயால் பாதிக்கப்பட்ட சாம்பியா நாட்டுக்கு மனிதாபிமான உதவிகள் இந்தியா சார்பில் செய்ய முடிவு செய்யப்பட்டதையொட்டி 3.5 டன் மருந்து உதவிபொருட்கள் நேற்று சரக்கு விமானம் மூலம் அனுப்பபட்டு உள்ளது. இதில் குடிநீர் சுத்திகரிப்பு பொருட்கள், குளோரின் மாத்திரைகள் உள்ளிட்ட மருந்துபொருட்கள் அடங்கும் என்று கூறினார்.

காலரா தொற்று நோயால் ஜாம்பியா பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த அண்டு அக்டோபர் மாதத்தில் இருந்து 15 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 600 பேர் உயிரிழந்ததாக தகவல் தெரிவிக்கின்றன. சாம்பியாவின் 10 மாகாணங்களில் 9-ல் காலரா பாதிப்பு பதிவாகியுள்ளது.

# சாதாரண கைதிகளைப்போல

## இம்ரான்கான் சிறையில் வேலை செய்ய உத்தரவு



**இஸ்லாமாபாத் : பிப். 7,**

**இம்ரான்கானுக்கு இதுவரை 4 வழக்குகளில் 34 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் பல்வேறு ஊழல் வழக்குகளில் கைது செய்யப்பட்டு லாகூரில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிரான வழக்குகளில் அடுத்தடுத்து தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இம்ரான்கானுக்கு இதுவரை 4 வழக்குகளில் 34 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வெவ்வேறு வழக்குகளில் இம்ரான்கானுடன் அவரது மனைவி புஷ்ரா பீவியும், முன்னாள் வெளியுறவு மந்திரி மஹ்மூத் ஷா குரேஷியும் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இம்ரான்கானும், குரேஷியும் அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் புஷ்ரா பீவி, கிளைச்சிறையாக அறிவிக்கப்பட்ட இம்ரான்கானின் இல்லத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

அடியாலா சிறையில் இம்ரான்கானுக்கும், குரேஷிக்கும் உயர்மட்ட கைதிகள் என்கிற அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அதாவது சாதாரண கைதிகளை போல அல்லாமல் சிறையில் அவர்களுக்கு பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இருவரும் தங்களுக்கு தேவையான உணவை தாங்களே தயாரித்து சாப்பிட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் உயர்மட்ட கைதிகளாக உள்ள போதிலும் இம்ரான்கானும், குரேஷியும் சிறை வளாகத்தில் பணிகளை மேற்கொள்ள வேண்டியது கட்டாயம் என சிறை நிர்வாகம் புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது. எனினும் இருவரும் எந்த மாதிரியான பணிகளை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளனர் என்கிற தகவல் வெளியாகவில்லை.

# இன்ஃபோசிஸ் நிறுவனத்துடனான இங்கிலாந்து அரசின் உறவு

## புதிய சர்ச்சையில் பிரதமர் ரிஷி சுனக்



**இங்கிலாந்தின் : பிப். 7,**

**பிரதமர் ரிஷி சுனக் தனது மாமனார் வீட்டுடன் தொடருடைய இந்தியாவின் இன்ஃபோசிஸ் நிறுவனத்துக்கு, இங்கிலாந்தில் அதிக முன்னுரிமை வழங்குவதாக புகாருக்கு ஆளாகி இருக்கிறார்.**

பிளவுறாத இந்தியாவில் தனது மூதாதையர்களை கொண்டவர் ரிஷி சுனக். தற்போது இங்கிலாந்தின் பிரதமராக இருக்கும் இவர், இந்த வகையில் இந்தியாவின் மகனாக கொண்டாடப்படுகிறார். இன்ஃபோசிஸ் மென்பொருள் நிறுவனத்தின் இணை நிறுவனரான நாராயணமூர்த்தியின் மகள் அக்ஷதாவை மணந்ததன் மூலம், இந்தியாவின் மருமகனாகவும் கொண்டாடப்படுகிறார். ஒரு காலத்தில் இந்தியாவை காலனி தேசமாக வைத்திருந்த இங்கிலாந்தை, தற்போது இந்தியாவின் வம்சாவளி ஆள்வதில் இந்தியர்களுக்கு அலாதி பெருமிதமும் உண்டு.

ஆனால் இந்த இந்திய தொடர்பே இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக்கிற்கு குடைச்சலாகவும் மாறி இருக்கிறது. மனைவி குடும்பத்துக்கு நெருக்கமான இன்ஃபோசிஸ் நிறுவனம், தனது இங்கிலாந்து சாம்ராஜ்ஜியத்தை விரிவுபடுத்த பிரதமர் குடும்பம் சகல வழிகளிலும் ஒத்தாசையாக இருப்பதாக அங்கத்திய ஊடகங்கள் குற்றம் சாட்டுகின்றன.

இதற்கு உதாரணமாக இங்கிலாந்தின் வர்த்தக அமைச்சர் டொமினிக் ஜான்சன், பெங்களூருவில் நடைபெற்ற இன்ஃபோசிஸ் அலுவல் சந்திப்பில் பங்கேற்றதுடன், இன்ஃபோசிஸ் நிறுவனத்துக்கான ஆக முடிந்த உதவிகளை செய்வதாக உறுதியளித்ததை ஆதாரங்களுடன் ஊடகங்கள் அம்பலப்படுத்தின. அதே போன்று, கொரோனா மத்தியில், ரிஷி சுனக் கிட்டத்தட்ட செயல் பிரதமராக இருந்த காலத்தில், ஊரடங்கு விதிகளுக்கு மாறாக இன்ஃபோசிஸ் நிறுவனத்துக்கான முன்னுரிமைகள் வழங்கப்பட்டதாகவும் குற்றம்சாட்டப்படுகிறது.

ரிஷி சுனக்கின் மனைவி அக்ஷதா மூர்த்தி, இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் 500 மில்லியன் பவுண்ட் மதிப்பிலான பங்குகளை தன் வசம் வைத்திருக்கிறார். இதற்கான டிவிடெண்ட் தொகையாக மட்டும் கடந்தாண்டில் சுமார் 13 மில்லியன் பவுண்டுகளை பெற்றிருக்கிறார். இந்த வகையில் இங்கிலாந்தின் மிகவும் பணக்கார பிரதமர் குடும்பம் என்ற பெருமைக்கும் ரிஷி சுனக் - அக்ஷதா மூர்த்தி தம்பதி ஆளாகி இருக்கிறது.

ஆனால் அந்த வருவாய்க்கான வரியை இங்கிலாந்தில் கட்டாது அக்ஷதா ஏமாற்றுவதாக புகார்கள் எழுந்தன. இங்கிலாந்தில் குடியுரிமை பெறாத ஒருவர், தனது வெளிநாட்டு வருமானத்துக்கு அங்கே வரி கட்ட வேண்டியதில்லை என்ற சட்டத்தின் ஓட்டையில் புகுந்து அக்ஷதா தப்புவதாக புகார்கள் எழுந்தன. சர்ச்சைகள் அதிகரிக்கவே, இங்கிலாந்திலும் வரி செலுத்துவதாக அக்ஷதா அறிவித்தார். ஆனால் அதனை வெளிப்படையாக பின்பற்றவில்லை என்ற புகார்கள் இப்போதும் தொடர்ந்து வருகின்றன.

மேலும், இங்கிலாந்தின் பெரும் மென்பொருள் ஒப்பந்தங்கள் இன்ஃபோசிஸ் நிறுவனத்துக்கு வழங்கப்படுவதாகவும், இதற்காக அந்த நிறுவனத்துக்கு விஐபி மரியாதையும், முன்னுரிமையும் வழங்கப்படுவதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுகின்றன. நாட்டு மக்களின் வரி வருவாய் இந்த வகையில், பிரதமர் குடும்பத்துடன் நெருக்கமான இந்திய நிறுவனத்துக்கு மடை மாற்றப்படுவதாகவும் அவர்கள் குறைபடுகின்றனர். ஏற்கனவே எதிர்க்கட்சியினர் மட்டுமன்றி தன்னுடைய கட்சி சகாக்கள் மூலமான அதிருப்திகளால் ஊசலாடும் ரிஷி சுனக்கின் பதவிக்கு இதனால் கூடுதல் சர்ச்சை சேர்ந்துள்ளது.

# "மிஸ் ஜப்பான்" வென்ற பெண், பட்டத்தை திரும்ப கொடுத்த காரணம்



**ஜப்பான் : பிப். 7,**

**கடந்த ஜனவரி 22 அன்று ஜப்பானில் நடைபெற்ற "மிஸ் ஜப்பான்" போட்டியில், கரோலினா ஷீனோ எனும் 26 வயது இளம் பெண் பட்டம் வென்றார்.**

உக்ரைன் நாட்டில் பிறந்த கரோலினா, தனது 5-வதுவயதில் தாயாருடன் ஜப்பானில் குடி புகுந்தார். நகோயா பகுதியில் வளர்ந்த கரோலினா, அவரது மாற்றாந்தந்தையின் பெயரை இணைத்து கொண்டுள்ளார். உக்ரைனில் பிறந்திருந்தாலும், கரோலினா ஜப்பானிய மொழியில் சரளமாக எழுதவும் பேசவும் தெரிந்தவர்.

ஜப்பான் நாட்டை சேர்ந்தவர் இல்லை என்பதுடன் அவர் ஜப்பானிய பெண்ணை போன்றே இல்லை என்பதால் அழகி போட்டியில் அவருக்கு பிரதிநிதித்துவம் கிடைத்தது தவறு என ஒரு சாராரும், அயல்நாட்டை பூர்வீகமாக கொண்ட ஒரு பெண் ஜப்பானிய போட்டியில் வென்றது பாராட்டுக்குரியது என வேறொரு தரப்பினரும் இவரது வெற்றியை குறித்து கருத்து தெரிவித்தனர்.

இந்நிலையில், ஷுகன் பன்ஷுன் எனும் உள்ளூர் பத்திரிகை ஒன்றில் கரோலினாவிற்கு ஒரு திருமணமான ஆணுடன் நட்பை கடந்த உறவு இருந்ததாக செய்தி வெளிவந்தது. இதை தொடர்ந்து தற்போது அழகி போட்டியை நடத்திய "மிஸ் ஜப்பான் சங்கம்", பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட அந்த ஆண் திருமணமானவர் என முன்னரே அறிந்திருந்ததாகவும் அதை மறைத்த தவறை ஒப்பு கொண்ட கரோலினா தனது "மிஸ் ஜப்பான்" பட்டத்தை திரும்ப அளித்து விட்டதாகவும் தெரிவித்தது. இது குறித்து கரோலினா, "என்னால் விளைந்த சிக்கல்களுக்கும், என்னை நம்பியவர்களை ஏமாற்ற நேர்ந்ததற்கும் நான் வருத்தம் தெரிவிக்கிறேன்" என தெரிவித்தார்.

# வடக்கு காசாவில் உணவு பொருட்கள் ஏற்றிச்சென்ற லாரி மீது தாக்குதல் : உதவி கிடைக்காமல் மக்கள் தவிப்பு



**காசா : பிப். 7,**

**பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் தொடங்கிய போர் 4-வது மாதத்தை நெருங்கியுள்ளது.**

இதில் அப்பாவி பொதுமக்கள் உள்பட 27 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். போர் காரணமாக காசா மக்கள், உணவு, தண்ணீர் மருந்து ஆகியவை கிடைக்காமல் அவதி அடைந்து வருகிறார்கள். அவர்களுக்கு லாரிகள் மூலம் நிவாரண பொருட்கள் அனுப்பப்பட்டாலும் போதுமான அளவு கிடைக்கவில்லை.

இந்நிலையில் வடக்கு காசாவில் மக்களுக்கு உணவு பொருட்கள் ஏற்றிச் சென்ற லாரி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஐ.நா. வின் பாலஸ்தீன அகதிகள் முகமை சார்பில் உணவு, மருந்து உள்ளிட்டவைகளை ஏற்றிச்சென்ற லாரி மீது இஸ்ரேல் கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். இதில் அந்த லாரி கடுமையாக சேதமடைந்தது. இதுகுறித்து பாலஸ்தீன அகதிகள் முகமை அமைப்பு கூறும்போது வடக்கு காசாவில் மக்கள் தீவிர உணவு பற்றாக்குறையை எதிர் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு உணவு பொருட்களுடன் லாரி ஒன்று செல்ல காத்திருந்தது.

அந்த லாரி மீது இஸ்ரேல் கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். மேலும் வடக்கு காசாவில் சுகாதார மருத்துவமனை ஒன்றும் அழிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான மற்றும் நிலையான மனிதாபிமான உதவிகள் காசாவின் எல்லா இடங்களிலும் அவசரமாக தேவைப்படுகிறது என்று தெரிவித்தது.

சமீபத்தில் ஐ.நா.வின் பாலஸ்தீன அகதிகளுக்கான முகமையை சேர்ந்த ஊழியர்கள் சிலர் ஹமாஸ் அமைப்பினருக்கு உதவுவதாக கூறி அந்த முகமைக்கு அளித்து வந்த நிதியுதவியை அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் நிறுத்தின என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையே காசா சிட்டியில் குவைத் ரவுண்டானா அருகே மனிதாபிமான உதவிக்காக காத்திருந்த மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாக ஐ.நா. மனிதாபிமான அமைப்பு தெரிவித்துள்ளது. காசா முழுவதும் போதிய நிவாரண பொருட்கள் கிடைக்காமல் மக்கள் தவித்து வருகிறார்கள்.

# வானவில் நிறத்தில் 'கம்மல்' அணிந்த பெண்ணுக்கு சிறை



**மாஸ்கோ : பிப். 7,**

**வானவில் நிறத்திலான கம்மல் அணிந்த பெண்ணுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

ரஷியாவில் தன்பாலின ஈர்ப்பாளர்கள் மற்றும் அதன் ஆதரவு செயல்பாடுகளுக்கு அந்நாட்டு கோர்ட்டு தடை விதித்துள்ளது. குறிப்பாக, கடந்த நவம்பர் மாதம் உத்தரவில் தன்பாலின ஈர்ப்பு ஆதரவு அமைப்புகளை பயங்கரவாத அமைப்புகள் என கோர்ட்டு அறிவித்துள்ளது. தன்பாலின ஈர்ப்பு ஆதரவு அமைப்புகளை ஒடுக்கும் நடவடிக்கையில் ரஷிய அரசு ஈடுபட்டு வருகிறது.

அதேபோல், தன்பாலின ஈர்ப்பை ஆதரிக்கும் வகையிலான வானவில் நிற கொடி, அது தொடர்பான பொருட்கள், புகைப்படங்களையும் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறுபவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிறை தண்டனையுடன் அபராதம் விதிக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வானவில் நிறத்தில் கம்மல் (காதணி) அணிந்த பெண்ணுக்கு ரஷிய கோர்ட்டு சிறை தண்டனை விதித்துள்ளது. ரஷியாவின் நிஸ்னிநவ்ஹொராட் பகுதியை சேர்ந்த அனஸ்டசியா எர்ஷொவா பொது இடத்தில் வானவில் நிறத்திலான கம்மல் அணிந்துள்ளார். இதையடுத்து, அவரை கைது செய்த போலீசார் கடந்த வாரம் கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். விசாரணை நடத்திய கோர்ட்டு எர்ஷொவாவுக்கு 5 நாட்கள் சிறை தண்டனை விதித்தது. இதையடுத்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

அதேபோல், சரடொவ் பகுதியை சேர்ந்த புகைப்பட கலைஞர் இனா மொசினா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வானவில் நிற கொடி புகைப்படத்தை பதிவிட்டுள்ளார். வானவில் நிற கொடி தன்பாலின ஆதரவாளர்களின் கொடி என்பதால் இனா மொசினா மீது வழக்குப்பதிவு செய்த போலீசார் அவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இனா மொசினா கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டபோது, தான் நிரபராதி என அவர் வாதிட்டார். மேலும், தன்பாலின ஈர்ப்பு ஆதரவு அமைப்புகளை பயங்கரவாத அமைப்புகள் என அறிவிப்பதற்கு முன்பாகவே வானவில் நிற கொடி புகைப்படத்தை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டேன். இந்த விவகாரத்தில் எந்த தவறும் செய்யவில்லை என்றும் மொசினா வாதிட்டார்.

ஆனால், இருதரப்பு வாதத்தையும் கேட்ட கோர்ட்டு மொசினாவுக்கு 1,500 ரூபெல் (இந்திய மதிப்பில் 1,357 ரூபாய்) அபராதம் விதித்தது. இதையடுத்து, வழக்கை முடித்துவைத்த கோர்ட்டு மொசினாவை விடுதலை செய்தது.

# ஏமன் பிரதமர் பதவி நீக்கம் : அமெரிக்கா தாக்குதல் நடத்திய நிலையில் ஆட்சிக்குழு அதிரடி



**ஏமன் : பி. 7,**

**ஏமன் நாட்டின் பிரதமர் மைன் அப்துல்மாலிக் சயீத் இருந்து வந்தார். இவர் கடந்த 2018-ல் இருந்து அந்நாட்டின் பிரதமராக இருந்து வந்த நிலையில், நேற்று முன்தினம் திங்கள்கிழமை அதிரடியாக மாற்றப்பட்டுள்ளார்.**

அவருக்குப் பதிலாக வெளியுறவுத்துறை மந்திரியாக இருந்த அகமது அவாத் பின் முபாரக் புதிய பிரதமாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் சவுதி அரேபியாவுடன் நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏமனின் ஆட்சிக்குழு பிரதமரை மாற்றியுள்ளது. ஆனால், நீக்கத்திற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை. ஏமனில் உள்ள ஈரான் ஆதரவு பெற்ற கிளர்ச்சி குழுவான ஹவுதி, செங்கடலில் வணிக கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு பதிலடியாக அமெரிக்கா ஏமன் நாட்டில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியது. இதன் தொடர்ச்சியாக தற்போது பிரதமர் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஏமன் கடந்த 2014-ல் இருந்து உள்நாட்டு சண்டையில் சிக்கி தவித்து வருகிறது. ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தலைநகர் உள்ளிட்ட இடங்களை பிடித்து. பின்னர் 2015-ல் சவுதி அரேபியா தலைமையிலான குழு ஏமன் நாட்டின் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்து வருகிறது. இந்த சண்டையில் இதுவரை ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

# செங்கடலில் நேற்றும் டிரோன் மூலம் சரக்கு கப்பல் மீது தாக்குதல்



**ஏமன் : பிப். 7,**

**தெற்கு செங்கடல் வழியாக நேற்று காலையில் சென்ற கப்பல் மீது ஆளில்லா விமானம் (டிரோன்) மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.**

காசா பகுதியில் ஹமாஸ் மீது இஸ்ரேல் நடத்திய போரையொட்டி கப்பல்களை குறிவைத்து தாக்கப்பட்டு வரும் நிலையில், ஏமனின் ஹொடைடாவிற்கு மேற்கே இந்த தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது. இந்த தாக்குதலில் கப்பலின் ஜன்னல்களுக்கு சிறிய சேதம் ஏற்பட்டு உள்ளது என்று இங்கிலாந்து ராணுவ கடல்சார் அமைப்பு தெரிவித்தது.

தாக்குதல் நடந்த கப்பல் இங்கிலாந்து தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான சரக்குக் கப்பல் ஆகும். பார்படோஸ் கொடியுடன் சென்று கொண்டிருந்தபோது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு முன்னதாக கப்பல் அருகே படகு ஒன்று சென்றுள்ளது. இதில் கப்பலில் இருந்த யாருக்கும் காயம் ஏற்படவில்லை. கப்பலில் சிறிய சேதம் ஏற்பட்டு உள்ளது. இந்த தாக்குதல் சம்பவத்துக்கு எந்த குழுவும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை. ஏமனில் உள்ள ஈரானிய ஆதரவு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டு உள்ளது.

## வருமான வரி, அமலாக்கத்துறை வந்தால் கவலை இல்லை, வரவேற்கிறோம்;  சட்டத்துறை அமைச்சர் ரகுபதி





## ஸ்பெயின் சுற்றுப்பயணம் நிறைவு : இன்று தமிழகம் திரும்புகிறார் முதல்வர் ஸ்டாலின்

## எல்.முருகனிடம் டி.ஆர்.பாலு பொது இடத்தில் மன்னிப்புக் கேட்க வேண்டும் : அண்ணாமலை காட்டம்




சென்னை / புதுக்கோட்டை | 07.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சர் பி. எஸ். சிவசுவாமி , இந்திய வழக்கறிஞர், நிருவாகி, அரசியல்வாதி (பி.1864) (இ.1946)



தேவநேயப் பாவாணர் , தமிழறிஞர் (பி.1902) (இ.1981)



கே. என். சொக்சி , இலங்கை அரசியல்வாதி (பி.1913) (இ.2015)



ஆ. மாதவன் , கேரளத் தமிழ் எழுத்தாளர் (பி.1934) (இ.2021)



டோனி டேன் கெங் யம் , சிங்கப்பூரின் 7வது குடியரசுத் தலைவர் (பி.1940)



இராசமனோகரி புலேந்திரன் , இலங்கை அரசியல்வாதி (பி.1949) (இ.2014)



## இன்றைய நினைவு நாள்

சுவாமி அகண்டானந்தர் , சுவாமி இராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர் (பி.1864) (இ.1937)

